KSJ TRB ACADEMY

• Knowledgeful • Successful • Joyful

KSJ

# சுடரொளி தமிழ் உரை

• ஞானம் • ஜெயம் • மகிழ்ச்சி



## 12

# தமிழ்

Padasalai

புதிய பாடத்திட்ட அடிப்படையில் உருவாக்கம்




- வினாத்தாள் அடிப்படையிலான உரை
- மீத்திறன் மாணவர்களுக்கான கூடுதல் வினாக்கள்
- மெல்ல மலரும் மொட்டுகளுக்கான எளிய விடைகள்
- அரசு மற்றும் பெற்றோர் ஆசிரியர் கழக மாதிரி வினாத்தாள்கள் & விடைக்குறிப்பு

**இலவசம்** அகமதிப்பீட்டுத் தேர்வு & ஒப்படைப்புக் குறிப்பேடு

For Orders: 99449 91847, 98653 15131, 99444 88077

# www.Padasalai.Net

படங்களை தொடுக! பாடசாலை வலைதளத்தை சமூக ஊடகங்களில் பின்தொடர்க!! உடனுக்குடன் புதிய செய்திகளை Notifications-ல் பெறுக!

Zoom Touch Below Links Download!

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **12th Standard** | Syllabus | Books | Study Materials – EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | PTA Book Q&A | Centum Questions | Creative Questions |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NEET | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **11th Standard** | Syllabus | Books | Study Materials – EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | Centum Questions | Creative Questions | |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NEET | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **10th Standard** | Syllabus | Books | Study Materials - EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | PTA Book Q&A | Centum Questions | Creative Questions |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NTSE | SLAS | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **9th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Quarterly Exam | Half Yearly Exam | Annual Exam | RTE | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **8th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Term 1 | Term 2 | Term 3 | Public Model Q&A | NMMS | Periodical Test |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **7th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Term 1 | Term 2 | Term 3 | Periodical Test | SLAS | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **6th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Term 1 | Term 2 | Term 3 | Periodical Test | SLAS | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **1st to 5th Standard** | Syllabus | Books | Study Materials | Periodical Test | SLAS | |
| | Term 1 | Term 2 | Term 3 | Public Model Q&A | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **Exams** | TET | TNPSC | PGTRB | Polytechnic | Police | Computer Instructor |
| | DEO | BEO | LAB Asst | NMMS | RTE | NTSE |

| | | | |
|---|---|---|---|
| **Portal** | Matrimony | Mutual Transfer | Job Portal |

| | | | |
|---|---|---|---|
| **Volunteers** | Centum Team | Creative Team | Key Answer Team |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **Downloads** | LESSON PLAN | Department Exam | Income Tax | Forms & Proposals | Fonts | Downloads |
| | Proceedings | GO's | Regulation Orders | Pay Orders | Panel | |

**Padasalai – Official Android App – Download Here**

**Kindly Send Your Study Materials, Q&A to our Email ID** – Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# பொருளடக்கம்



| வ. எண். | வினாத்தாள் வடிவமைப்பு | வினாத்தாள் வினா எண் | உரைநூல் பக்க எண் |
|---|---|---|---|
| | பகுதி – I | | |
| | இயல் 1 முதல் 8 வரை ( புத்தக மற்றும் கூடுதல் வினாக்கள் ) | | |
| 1. | பலவுள் தெரிக | 01- 14 | 01- 44 |
| | பகுதி – II ( குறுவினா ) | | |
| | இயல் 1 முதல் 8 வரை ( புத்தக மற்றும் கூடுதல் வினாக்கள் ) | | |
| 2. | பிரிவு - 1 செய்யுள் | 15 - 18 | 45 - 60 |
| 3. | பிரிவு - 2 உரைநடை | 19 - 21 | 61 - 69 |
| 4. | பிரிவு - 3 இலக்கணம் | 22 | 70 - 81 |
| 5. | மொழியை ஆள்வோம், மொழியோடு விளையாடு | 23 - 30 | |
| 6. | உவமைத்தொடர்களைச் சொற்றொடர்களில் அமைத்து எழுதுக. | | 82 |
| 7. | குறிப்புகளில் மறைந்திருக்கும் தமிழறிஞர்களைக் கண்டுபிடிப்போம் | | 83 |
| 8. | படிப்போம் பயன்படுத்துவோம் | | 83 - 84 |
| 9. | மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக. | | 84 - 85 |
| 10. | புதிர்க்கேற்ற விடையை அறிக. | | 85 |
| 11. | வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக. | | 86 - 89 |
| 12. | பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்து முறையான தொடர்களாக ஆக்குக. | | 89 - 90 |
| 13. | தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக. | | 90 - 91 |
| 14. | சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க. | | 91 - 92 |
| 15. | பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக. | | 92 - 93 |
| 16. | ஈற்றடி எழுதித் துளிப்பாவை நிறைவு செய்க. | | 93 - 94 |
| 17. | கீழ்க்காணும் தொடர்களில் அடைப்புக்குள் உள்ள பெயர்ச்சொல்லைத் தொடர்களுக்கு ஏற்றவாறு மாற்றி எழுதுக. | | 94 |
| 18. | பொருள் வேறுபாடு அறிந்து தொடர் அமைக்க. | | 94 - 97 |
| 19. | கீழ்க்காணும் நான்கு சொற்களைக் கொண்டு தொடர் எழுதுக. | | 98 |
| 20. | மரபுச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக. | | 98 - 100 |
| 21. | மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக. | | 100 - 103 |





Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in




| | | | |
|---|---|---|---|
| 22. | பத்தியைப் படித்துத் தேவையான இடங்களில் நிறுத்தக்குறிகளை இட்டு எழுதுக. | | 103 - 108 |
| 23. | விடைக்கேற்ற வினா அமைத்தல் | | 108 - 111 |
| 24. | இலக்கணக் குறிப்பு தருக. | | 111 - 114 |
| 25. | புணர்ச்சி விதி தருக. | | 115 - 116 |
| 26. | உறுப்பிலக்கணம் வரையறை | | 116 - 118 |
| 27. | பகுபத உறுப்பிலக்கணம் தருக. | | 119 - 120 |
| 28. | பொருள் கூறுக | | 121 - 123 |
| 29. | அறிவை விரிவு செய் | | 123 |
| | **பகுதி – III (சிறுவினா)** | | |
| | **இயல் 1 முதல் 8 வரை ( புத்தக மற்றும் கூடுதல் வினாக்கள் )** | | |
| 30. | பிரிவு - 1 செய்யுள் ( இயல் 1 முதல் 8 வரை ) | 31 - 34 | 124 - 139 |
| 31. | பிரிவு - 2 உரைநடை ( இயல் 1 முதல் 8 வரை ) | 35 - 38 | 140 - 150 |
| 32. | பிரிவு - 3 அணிகள் | 39 - 43 | 151 - 153 |
| 33. | திணைகள் - புறத்திணை | | 153 |
| 34. | அகத்திணை | | 153 - 154 |
| 35. | துறைகள் | | 156 - 157 |
| 36. | பழமொழியை வாழ்க்கை நிகழ்வோடு பொருத்தி எழுதுக. | | 158 - 160 |
| 37. | இலக்கியநயம் பாராட்டுக. | | 160 - 167 |
| 38. | எண்ணங்களை எழுத்தாக்குக. | | 168 - 170 |
| 39. | கவிதை எழுதுதல் | | 171 - 174 |
| 40. | தமிழாக்கம் தருக | | 174 - 178 |
| 41. | மொழியை ஆள்வோம் (சான்றோர் சித்திரம்) | | 178 - 202 |
| | **பகுதி – IV (நெடுவினா)** | | |
| | **இயல் 1 முதல் 8 வரை ( புத்தக மற்றும் கூடுதல் வினாக்கள் )** | | |
| 42. | செய்யுள் | 44 | 203 - 212 |
| 43. | உரைநடை | 45 | 212 - 226 |
| 44. | துணைப்பாடம் | 46 | 227 - 241 |
| | **பகுதி – V** | | |
| 45. | மனப்பாடச் செய்யுள் ( இயல் 1 முதல் 8 வரை ) | 47 | 242 - 243 |
| | | | |
| 46. | அரசுப் பொதுத்தேர்வு - மார்ச் 2020 | | 244 - 246 |
| 47. | பெற்றோர் - ஆசிரியர் கழகம் மாதிரி வினாத்தாள் | | 247 - 268 |
| 48. | அரசுப் பொதுத்தேர்வு - மார்ச் 2020 விடைக்குறிப்புகள் | | 268 - 270 |
| 49. | பெற்றோர் - ஆசிரியர் கழக மாதிரி வினாத்தாள் விடைக்குறிப்புகள் | | 271 - 279 |




Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

# பகுதி – I (14x1=14)

## 1. பலவுள் தெரிக

**புத்தக வினா**

**இயல் - 1**

1. **இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கண நூல்.............**

அ) யாப்பருங்கலக்காரிகை ஆ) தண்டியலங்காரம்
இ) தொல்காப்பியம் ஈ) நன்னூல் **விடை : இ**

2. **"மீண்டுமந்தப் பழமைநலம் புதுக்கு தற்கு" - கவிஞர் குறிப்பிடும் பழமை நலம்.............**

க) பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தது. உ) பொதிகையில் தோன்றியது
ங) வள்ளல்களைத் தந்தது

அ) க மட்டும் சரி ஆ) க, உ இரண்டும் சரி
இ) ங மட்டும் சரி ஈ) க, ங இரண்டும் சரி **விடை : ஈ**

3. **"மின்னேர் தனியாழி வெங்கதிரொன்று ஏனையது
தன்னேர் இலாத தமிழ்!" இவ்வடிகளில் பயின்று வந்துள்ள தொடை நயம்.............**

அ) அடிமோனை, அடி எதுகை ஆ) சீர்மோனை, சீர்எதுகை
இ) அடி எதுகை, சீர் மோனை ஈ) சீர் எதுகை , அடி மோனை **விடை : இ**

4. **கருத்து 1 : இயல்பு வழக்கில், தொடரமைப்பு என்பது எழுவாய், பயனிலை என்று வருவதே மரபு
கருத்து 2 : தொடரமைப்பு, சங்கப்பாடல்கள் பலவற்றில் பிறழ்ந்து வருகிறது.**

அ) கருத்து 1 சரி ஆ) கருத்து 2 சரி
இ) இரண்டு கருத்தும் சரி ஈ) கருத்து 1 சரி, 2 தவறு **விடை : இ**

5. **பொருத்துக.**

அ) தமிழ் அழகியல் - 1) பரலி.சு.நெல்லையப்பர்
ஆ) நிலவுப்பூ - 2) தி.சு.நடராசன்
இ) கிடை - 3) சிற்பி. பாலசுப்பிரமணியம்
ஈ) உய்யும்வழி - 4) கி.ராஜநாராயணன்

அ) 4,3,2,1 ஆ)1,4,2,3
இ) 2,4,1,3 ஈ)2,3,4,1 **விடை : ஈ**

6. **பிழையான தொடரைக் கண்டறிக.**

அ) காளைகளைப் பூட்டி வயலை உழுதனர்
ஆ) மலைமீது ஏறிக் கல்வெட்டுகளைக் கண்டறிந்தனர்
இ) காளையில் பூத்த மல்லிகை மனம் வீசியது
ஈ) நெற்பயிர்கள் மழைநீரில் மூழ்கின **விடை : இ**

7. **பேச்சுத்தமிழில் அமைந்த தொடரைத் தேர்க.**

அ) அவருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும்
ஆ) புத்தகக் கண்காட்சி நடைபெறுகிறது.
இ) வறட்சி எல்லா இடங்களையும் பாதித்துள்ளது
ஈ) மயில்கள் விறலியரைப் போல் ஆடுகின்றன **விடை : அ**

**இயல் - 2**

1. **பொருத்துக.**

அ) குரங்குகள் - 1) கன்றுகளைத் தவிர்த்தன
ஆ) பசுக்கள் - 2) மரங்களிலிருந்து வீழ்ந்தன
இ) பறவைகள் - 3) குளிரால் நடுங்கின
ஈ) விலங்குகள் - 4) மேய்ச்சலை மறந்தன

அ) 1,3,4,2 ஆ) 3,1,2,4 இ) 3,2,1,4 ஈ) 2,1,3,4 **விடை: ஆ**

www.Padasalai.Net www.CBSEtips.in



16. சிறுபாணாற்றுப்படை எத்தனை அடிகளை உடையது?
அ) 188 ஆ) 269 இ) 500 ஈ) 103 விடை : ஆ

17. சிறுபாணாற்றுப்படையின் பாட்டுடைத்தலைவன்
அ) நன்னன் ஆ) நல்லியக்கோடன் இ) கரிகாலன் ஈ) முருகன் விடை : ஆ

18. பத்துப்பாட்டு ஆராய்ச்சி என்ற நூலின் ஆசிரியர்
அ) மு.இராகவையங்கார் ஆ) தேவநேயப்பாவாணர்
இ) உ.வே.சா ஈ) மா.இராசமாணிக்கனார் விடை : ஈ

19. குமணவள்ளல் ஆட்சி செய்த மலை
அ) முதிரமலை ஆ) கொல்லிமலை இ) பொதியமலை ஈ) நாரிமலை விடை : அ

20. "அறிமடமும் சான்றோர்க்கு அணி" என்ற வரி இடம்பெறும் நூல் ?
அ) நாலடியார் ஆ) நான்மணிக்கடிகை
இ) பழமொழிநானூறு ஈ) ஐந்திணை ஐம்பது விடை : இ

21. சிறுபாணன் பயணம் தொடங்கிய இடம்
அ) நல்லூர் ஆ) கிடங்கில் இ) எயிற்பட்டினம் ஈ) வேலூர் விடை : அ

22. சிறுபாணன் பயணம் முடித்த இடம்
அ) நல்லூர் ஆ) கிடங்கில் (திண்டிவனம்) இ) ஆமூர் ஈ) வேலூர் விடை : ஆ

23. பொருத்துக.

| | | |
|---|---|---|
| அ) பேகன் | - | 1. நெடுங்கோடுமலை முகடு |
| ஆ) பாரி | - | 2. பொதியமலை |
| இ) ஆய் அண்டிரன் | - | 3. பறம்புமலை |
| ஈ) நள்ளி | - | 4. பழனிமலை |

அ) 4 3 2 1 ஆ) 4 2 3 1 இ) 3 2 1 4 ஈ) 4 1 2 3 விடை : அ

24. வல்வில் ஓரி ஆண்ட மலை
அ) பழனிமலை ஆ) பொதியமலை இ) கொல்லிமலை ஈ) பிரான்மலை விடை : இ

25. பிரான்மலை - எந்த மாவட்டத்தில் உள்ளது?
அ) சிவகங்கை ஆ) திருநெல்வேலி இ) சென்னை ஈ) கோவை விடை : அ

26. பொதிய மலையின் வேறுபெயர்
அ) நளிமலை ஆ) பழனிமலை
இ) அகத்தியர் மலை ஈ) கொல்லிமலை விடை : இ

27. அதியமான் ________ மலைப்பகுதியில் இருந்து பறித்து வந்த நெல்லிக்கனியையே ஔவையாருக்கு கொடுத்ததாகக் கூறப்படுகிறது?
அ) பழனி ஆ) பூரிக்கல் இ) மலாடு ஈ) அகத்தியர் விடை : ஆ

28. எழுவர் பூண்ட ஈகைச் செந்நுகம்
விரிகடல் வேலி வியலகம் விளங்க
ஒருதான் தாங்கியவன் யார்?
அ) பேகன் ஆ) நல்லியக்கோடன் இ) ஓரி ஈ) நள்ளி விடை : ஆ

29. ஈர நன்மொழி இரவலர்க்கு ஈந்தவன்
அ) பேகன் ஆ) பாரி இ) காரி ஈ) ஆய் விடை : இ

30. "ஆலமர் செல்வன்" - யார்?
அ) சிவன் ஆ) திருமால் இ) பிரம்மா ஈ) முருகன் விடை : அ

31. ஆவியர்பெருமகன் - யார்
அ) பேகன் ஆ) பாரி இ) ஆய் ஈ) காரி விடை : அ





Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# பகுதி – II (3x2=6)

## பிரிவு - 1 (செய்யுள்) குறுவினா

**இயல் - 1**
**புத்தக வினா**

### இளந்தமிழே

1. **கவிஞர் சிற்பி எவற்றை வியந்துபாட, தமிழின் துணை வேண்டும் என்கிறார் ?**

➢ மலை முகடுகளில் மறைகின்ற சிவப்புச் சூரியன் தலை சாய்க்கும் போது வான்வெளி எங்கும் சிவப்பு பூக்காடாக மாறும்.

➢ அதுபோல உழைக்கும் தொழிலாளர்கள் தன் கைகள் சிவக்கும் வண்ணம் உழைக்கின்றார்கள்.

➢ விம்முகின்ற தோள்களில் வியர்வை வெள்ளம் முத்துமுத்தாய் நிறைந்து இருக்கும்.

➢ இவற்றையெல்லாம் வியந்து பாட தமிழின் துணை அல்லாமல் வேறுண்டோ? எனச் சிற்பி கூறுகிறார்.

**கூடுதல் வினா**

1. **எத்தகைய வலிமையுடையது தமிழ் என சிற்பி கூறி அழைக்கிறார்?**

➢ வானம் அளந்தது அனைத்தையும் அளக்கும் வலிமை மிக்கது தமிழ்மொழியாகும்.

➢ வீரத்துடன் கூண்டுதனை உடைத்தெழுந்த சிங்கம் போலக் குளிர் பொதிகை மலையிலிருந்து புறப்பட்டு வரும் தென்தமிழே சீறிக்கொண்டு வா! வாவென சிற்பி கூறி அழைக்கிறார்.

2. **சிற்பி பாலசுப்பிரமணியத்தின் கவிதை நூல்கள் யாவை?**

➢ ஒரு கிராமத்து நதி ➢ சூரிய நிழல் ➢ சர்ப்பயாகம் ➢ ஒளிப்பறவை ➢ பூஜ்யங்களின் சங்கிலி

3. **கவிதைக்குப் பொருத்தமான தமிழை எவ்வாறு சிறப்பித்துப் பாடுகிறார்?**

➢ பொங்கிவரும் கவிதைக்குப் பொருத்தமாக விளங்கப் பெறுவது தமிழ்மொழியாகும்.

➢ பாண்டியரின் முச்சங்கத்தில் கொலுவிருந்தது

➢ பாரி முதலான கடையெழு வள்ளல்களைப் பெற்றவள் தமிழ். ஆகையினாலே, பொங்கிவரும் கவிதைவெறிக்குப் பொருத்தமாக தமிழைச் சிறப்பித்துக் கூறுகிறார்.

**கூடுதல் வினா**

### தன்னேர் இலாத தமிழ் - தண்டியலங்கார உரை மேற்கோள் பாடல்

4. **மக்களின் அறியாமை எனும் அக இருளைப் போக்குவது எது?**

➢ பொதிகை மலையில் தோன்றி, சான்றோர்களால் தொழப்பட்டு மக்களின் அறியாமை எனும் அக இருளைப் போக்குவது "தன்னேர் இலாத தமிழ்" மொழியாகும்.

5. **அணியிலக்கணத்தை மட்டுமே கூறும் இலக்கணநூல்கள் யாவை ?**

1. தண்டியலங்காரம் 2. மாறனலங்காரம் 3. குவலயானந்தம்

6. **அணியிலக்கணத்தையும் கூறும் இலக்கணநூல்கள் யாவை ?**

1. தொல்காப்பியம் 2. வீரசோழியம் 3. இலக்கணவிளக்கம் 4. தொன்னூல் விளக்கம் 5. முத்துவீரியம்

7. **தண்டியலங்காரம் நூற்குறிப்புத் தருக.**

➢ அணி இலக்கணத்தைக் கூறும் சிறப்பான நூல்களுள் தண்டியலங்காரமும் ஒன்று.

➢ தண்டி, காவியதர்சம் என்னும் வடமொழி இலக்கண நூலைத் தழுவி தமிழில் எழுதப்பட்டது.

➢ இந்நூலின் ஆசிரியர் தண்டி. இவர் கி.பி 12 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர்.

➢ இந்நூல் பொதுவியல், பொருளணியியல், சொல்லணியியல் என மூன்று பிரிவுகளைக் கொண்டது.

8. **பொருள் வேற்றுமை அணி என்றால் என்ன?**

➢ இருவேறு பொருள்களுக்கிடையே உள்ள ஒற்றுமையை முதலில் கூறிப் பின்னர் வேறுபடுத்திக் காட்டுவது பொருள் வேற்றுமை அணி எனப்படும்.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**2. ஔவையார் பற்றிக் குறிப்புத் தருக.**

- அதியமானிடம் அரசவைப் புலவராக இருந்து அரும் பணியாற்றியவர்.
- அதியமானிடம் நட்பு பாராட்டிய ஔவை அவருக்காகத் தூது சென்றவர்.
- சங்கப்பாடல்களில் அகநானூறு (4) குறுந்தொகை (15) நற்றிணை (7) புறநானூறு (33) என 59 பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

**3. "அறிவும் புகழும் உடையோர் மாய்ந்தென வறுந்தலை உலகமும் அன்றே"- விளக்கம் தருக.**

- அறிவும் புகழும் உடையோர் இன்னும் மாய்ந்துவிடவில்லை.
- இந்த உலகமும் வெற்றிடமாகிவிடவில்லை. அறிவால் இந்த உலகையே சொந்தமாக்கிக் கொள்வர் என்பதே பொருளாகும்.

**4. பாடாண் திணை என்றால் என்ன?**

- ஒருவருடைய புகழ், வலிமை, கொடை, அருள் போன்ற நல்லியல்புகளைச் சிறப்பித்துக் கூறுவது பாடாண் திணையாகும்.

**5. பரிசில் துறை என்றால் என்ன?**

- பரிசு வேண்டி அரண்மனை வாயிலில் நிற்பது பரிசில் துறையாகும்.

## தெய்வமணி மாலை - இராமலிங்க அடிகள்

### இயல் - 5

### புத்தக வினா

**1. தருமமிகு சென்னையில் கந்த கோட்டத்துள்வளர் தலமோங்கு கந்தவேளே - இந்த தொடருக்குப் பதவுரை எழுதுக.**

- **இவ்வரி இடம் பெறும் நூல் :** திருவருட்பாவில் ஐந்தாம் திருமுறையில் இடம்பெற்ற தெய்வமணிமாலை.
- **ஆசிரியர் :** இராமலிங்கஅடிகள்
- அறம் செய்வார் நிறைந்திருக்கும் சென்னையின் கந்தகோட்டத்துத் திருக்கோவிலில் எழுந்தருளியிருக்கும் கந்தவேளே என உள்ளம் உருகிப்பாடுகிறார் இராமலிங்க அடிகளார்.

### கூடுதல் வினா

**1. இராமலிங்க அடிகள் இயற்றிய உரைநடை நூல்கள் யாவை?**

- மனுமுறை கண்டவாசகம்
- ஜீவகாருண்ய ஒழுக்கம்

**2. இராமலிங்க அடிகள் யாருடைய உறவு வேண்டும் என்று கூறுகிறார்?**

- ஒரு நெறிப்பட்ட மனத்துடன் உன்னுடைய மலர் போன்ற திருவடிகளை நினைக்கின்ற உத்தமர் உறவு வேண்டும்

**3. இராமலிங்க அடிகள் யாருடைய உறவு பற்றாதவாறு காக்க வேண்டும் என்று கூறுகிறார்?**

- உள்ளத்தில் ஒன்றும் புறத்தில் ஒன்றுமாகப் பேசும் வஞ்சகர் தம் உறவு என்னைப் பற்றாதவாறு காக்க வேண்டும்.

**4. இராமலிங்க அடிகள் எதைப் பேச வேண்டும், எதைப் பேசாதிருக்க வேண்டும் என்று கூறுகிறார்?**

- பெருமைமிக்க உனது புகழையே நான் பேச வேண்டும்.
- பொய் பேசாதிருக்க வேண்டும்.

**5. இராமலிங்க அடிகளார் தன்னை அணுகாதிருக்க வேண்டும் என்று எதைக் கூறுகிறார்?**

- மதமான பேய் என்னை அணுகாதிருக்க வேண்டும் என்று கூறுகிறார்.

**6. இராமலிங்க அடிகளார் மறக்க வேண்டுவன, மறவாதிருக்க வேண்டுவன எவை எங்கு கூறுகிறார்?**

**மறக்க வேண்டுவன:**

- துறவுக்கு எதிரான பெண்ணாசையை என் மனம் மறக்க வேண்டும்.

**மறவாதிருக்க வேண்டுவன:**

- சென்னையின் கந்தகோட்டத்துத் திருக்கோவிலில் எழுந்தருளியிருக்கும் கந்தவேளே உன்னை என்றும் மறவாதிருக்க வேண்டும் எவை என்று கூறுகிறார்.

**7. இராமலிங்க அடிகளாரின் பணிகளை எழுதுக?**

- சமரச சன்மார்க்க நெறிகளை வகுத்துள்ளார்.
- பசிப்பிணி போக்கியவர்
- சிறுவயதிலேயே கவிபாடும் ஆற்றல் பெற்றவர்.
- இம்மண்ணில் ஆன்மநேயஒருமைப்பாடு எங்கும் தழைக்கவும் உண்மை நெறி ஓங்கவும் உழைத்தவர் அடிகளார்.





Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



- நாயைக்கட்டுவது போலச் சங்கிலியினால் கட்டிவைத்து, என்னைத் துன்புறுத்திச் சிறையிலிட்டனர்.
- அப்படிச் சிறையிலிட்டவரின் உதவியினால் வந்த தண்ணீரை மனவலிமையின்றி இரந்து உண்ணுபவரை இவ்வுலகில் அரசர் என்று என்னைப் போற்றுவரோ?
- எனத் தன் சிறுமையை நினைத்து உயிர்விட்டான்.

**4. குன்றவர்கள் கண்ட வியப்பான செய்தியை எழுதுக?**

- இந்திரன் கோவலனோடு வந்து பத்தினியாகிய கண்ணகியை, விண்ணுலகு அழைத்துச் சென்ற வியப்பான காட்சியை குன்றவர்கள் கண்டனர்.

**5. யானை சினந்து வர மகளிர் நடுங்கி அஞ்சிய விதத்தை வெளிப்படுத்துக?**

- மதம் பிடித்த யானை மரங்களை முறித்தது.
- கார்கால மேகம் இடிப்பது போல முழங்கியது.
- உயிர் பிழைப்பதற்கு வேறு இடம் காண இயலாமல் மன நடுக்கம் அடைந்தோம்.
- உயிரினும் சிறந்த நாணத்தைக் காக்க மறந்தோம்.
- வளையல்கள் ஒலிக்க விரைந்து ஓடிச்சென்று தலைவனைச் சேர்ந்து மயில் போல நடுங்கி நின்றோம்.

**6. பெருவீரன் ஒருவன் தனியாகப் பெரும் படையை எதிர்க்கும் பெருமிதத்தைக் குறிப்பிடுக?**

- எறிதற்குரிய ஒளிமிக்க வேலினையும் தேன்நிறைந்த பூமாலையினையும் உடைய தேர்வேந்தனே!
- வாளுடன் பகையரசனின் பெரும் படையை நான் தடுப்பேன்.
- என்முன் அப்பெரும் படை சிறு விளக்கின் முன் இருள் ஓடுவது போல ஓடும் என்று வீரமாக ஒருவன் கூறுகிறான்.

**7. தன்னை இளையவன் என்று எள்ளிய பகைவேந்தர் மீது பாண்டிய நெடுஞ்செழியன் சினம் கொண்டு கூறிய வஞ்சினத்தை எழுதுக?**

- சிறுசொல் சொல்லிய சினம் மிக்க வேந்தரை வென்று அவர்கள் சிதறி ஓடுமாறு, போரிட்டு அவர்களது முரசையும் ஒருங்கே கைப்பற்றுவேன் என்று கூறுகிறான்.

**8. கண்ணனைக் கண்ட குந்தியின் மகிழ்ச்சியை எழுதுக?**

- முழுநிலவு முகத்தாள் குந்தி, திறன் மிக்க மருமகன் கண்ணனை எதிர்கொண்டாள்.
- வெள்ளலைகள் நிறைந்த நீலக் கடலின் நீரை முகந்து வரும் மேகத்தைக் கண்ட தோகை மயில் போல மகிழ்ந்து வரவேற்றாள்.

**9. மெய்ப்பாடு பற்றிச் செயிற்றியம் கூறுவனவற்றை எழுதுக?**

- உய்ப்போன் செய்தது காண்போர்க்கு எய்துதல்
  மெய்ப்பாடென்ப மெய்யுணர்ந் தோரே - செயிற்றியம்

## திருக்குறள்

### புத்தக வினா

**1. மனத்தை அதன் போக்கில் செல்லவிடக் கூடாது என்று வள்ளுவம் கூறுவது ஏன்?**

- மனத்தை அது போகும் போக்கில் செல்லவிடாமல், தீமையிலிருந்து விலக்கி நல்ல வழியில் செலுத்துவதே அறிவாகும்.

**2. "உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு அச்சாணி அன்னார் உடைத்து" - இக்குறட்பாவின் உவமையைப் பொருளோடு பொருத்துக.**

- **உவமை :-** உருவுகண்டு எள்ளாமை வேண்டும் (ஒருவரின் உருவத்தைக் கண்டு இகழக்கூடாது).
- **உவமையைப் பொருளோடு பொருத்தல் :-**
  1. ஒருவரின் தோற்றத்தைக் கண்டு இகழக்கூடாது.
  2. பெரிய தேர்க்குச் சிறு அச்சாணிதான் இன்றியமையாதது. அதுபோல உருவத்தைப் பார்த்து அவர் செயலை நாம் குறைவாக மதிப்பிடக்கூடாது.

**3. மன உறுதியின் தேவை பற்றித் திருக்குறள் யாது கூறுகிறது.**

- நல்ல செயல்பாட்டிற்கு மன உறுதியே வேண்டும் மற்றவை எல்லாம் பயன்படாது.

**4. நஞ்சுண்பவர் என வள்ளுவர் யாரை இடித்துரைக்கிறார்?**

- உறங்கியவர், இறந்தவரைவிட வேறுபட்டவர் அல்லர்; அவ்வாறே கள்ளுண்பவரும் நஞ்சு உண்பவரே ஆவர்.
- கள் உண்பவரை நஞ்சு உண்பவர் என வள்ளுவர் கூறுகிறார்.





Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## பகுதி – II (2x2=4)

### பிரிவு 2 - உரைநடை குறுவினா

### தமிழ்மொழியின் நடை அழகியல்

**இயல் - 1**

**புத்தக வினா**

1. **நடை அழகியல் பற்றித் தொல்காப்பியம் கூறும் கருத்தைக் குறிப்பிடுக.**
   - ➢ நடைபெற்றியலும் (கிளவியாக்கம்) என்றும் நடைநவின்றொழுகும் (செய்யுளியல்) என்றும் சில சொற்றொடர்களைத் தொல்காப்பியம் கையாண்டிருக்கிறது.
   - ➢ மேலும், ஆசிரிய நடைத்தே வஞ்சி; ஏனை வெண்பா நடைத்தே கலி (செய்யுளியல்) என்று தொல்காப்பியம் கூறுகிறது. நடை என்ற சொல் தெளிவான பார்வையோடு இங்கு இடம் பெறுகின்றது.
2. **"படாஅம் ஈத்த கெடாஇ நல்லிசைக்கடாஅ யானைக் கலிமான் பேக" - இச்சங்க கவிதைகளின் அடிகளில் ஓசை நயமிக்க சொற்களையும் அவற்றிக்கான இலக்கணக்குறிப்புகளையும் எடுத்து எழுதுக.**
   - ➢ படாஅம், கெடாஅ, கடாஅ - செய்யுளிசை அளபெடைகள் முதலியன ஓசை நயமிக்க சொற்களாகும்.
   - ➢ பேக - விளித்தல் விகாரம்
   - ➢ நல்லிசை - பண்புத்தொகை
   - ➢ ஈத்த - பெயரெச்சம்
   - ➢ கலிமான் - உரிச்சொற்றொடர்
3. **விடியல், வனப்பு - இரு சொற்களையும் ஒருங்கிணைத்து தொடரமைக்க.**
   - ➢ விடியல் பொழுதில் எழுந்து வயலில் உழைத்தால் உடலுக்கு வலிமையும் வனப்பும் கிடைக்கும்.

**கூடுதல் வினா**

1. **தி.சு. நடராசன் எழுதிய நூல்கள் யாவை?**
   - ➢ கவிதையெனும் மொழி
   - ➢ திறனாய்வுக்கலை
   - ➢ தமிழ் அழகியல்
   - ➢ தமிழின் பண்பாட்டு வெளிகள்
2. **தமிழில் உள்ள சில தொகை மொழிகளை எழுதுக?**
   - ➢ வைகுறு விடியல், கன்னி விடியல், புல்லென் மாலை, நள்ளென் யாமம், தீநீர், நெடுநீர், சின்னீர், நகைக்கூட்டம், ஓவச்செய்தி.
3. **தொகை மொழி என்பது என்ன? சான்று தருக?**
   - ➢ தொகை மொழி என்பது செறிவாக்கப்பட்ட ஒரு வடிவமைப்பு
   - ➢ தொகை மொழி வாக்கிய அமைப்பில் ஒரு சொல் போலவே நடைபெறும்
   - ➢ சான்று : நீர்படு பசுங்கலம் - தொகை மொழி
4. **சொல்வளம் என்பது என்ன?**
   - ➢ சொல்வளம் என்பது ஒரு பண்பாட்டின் அடையாளமாகும்.
   - ➢ தனிச்சொற்களாய் நிறைந்து அமைவதையும் குறிக்கும்.
   - ➢ ஒன்றுக்கு மேற்பட்ட சொற்கள் கவவுக்கை நெகிழாமல் முயங்கிக் கிடப்பதையும் குறிக்கும்.

**இயல் - 2**

### பெருமழைக்காலம்

**புத்தக வினா**

1. **"ஆளுக்கொரு மரம் வளர்ப்போம்" என்னும் முழக்கத் தொடர் வாயிலாக எவற்றை வலியுறுத்துவாய்?**

   ஆளுக்கொரு மரம் வளர்ப்போம் என்னும் தொடர் வாயிலாக
   - ➢ சுற்றுச்சூழல் தூய்மை
   - ➢ நிலச்சரிவு ஒழிப்பு
   - ➢ மழைநீர்ச் சேகரிப்பு
   - ➢ நிலத்தடிநீர் பெருக்கம்
   - ➢ மண் அரிப்பு ஏற்படாமை
   - ➢ காடுகள் பராமரிப்பு

   முதலானவற்றைக் குறித்து வலியுறுத்துவேன்.
2. **மனிதன் தன் பேராசை காரணமாக இயற்கை வளங்களைக் கடுமையாகச் சேதப்படுத்தியதன் விளைவை இன்று சந்தித்துக் கொண்டிருக்கிறான் - இரு தொடர்களாக்குக**
   - ➢ மனிதன் பேராசை காரணமாக இயற்கை வளங்களைக் கடுமையாகச் சேதப்படுத்தினான்.
   - ➢ அதன் விளைவை மனிதன் இன்று சந்தித்துக் கொண்டிருக்கிறான்.





Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

**9. மணந்தகம் என்றால் என்ன?**

- ➢ உயிரிகளைப் போன்றே குடும்பமும் தோன்றுகிறது; வளர்கிறது. பல கட்டங்களைக் கடக்கின்றது.
- ➢ வாழ்க்கைச் சுழற்சியில் பல வடிவங்களில் நிலைமாற்றம் அடைகிறது.
- ➢ குடும்பத்தின் தொடக்கமே திருமணமாகும்.
- ➢ மணம் புரிந்த கணவனும் மனைவியும் சேர்ந்த இல்லற வாழ்வின் தொடக்கக் கட்டமே "மணந்தகம்" எனப்படுகிறது.
- ➢ முதல் குழந்தை பிறக்கும் வரை உள்ள காலக்கட்டத்தை இந்நிலை குறிக்கிறது.
- ➢ (தொல். பொருள். 151) நூற்பாவில் மணந்தகம் எனும் குடும்ப அமைப்புப் பற்றி அறிய முடிகிறது.

## பண்டைய காலத்துப் பள்ளிக்கூடங்கள் - உ.வே.சாமிநாதர்

### இயல் - 4

### புத்தக வினா

**1. அக்காலத்துக் கல்வி முறையில் மனனப் பயிற்சிக்கு உதவிய நூல்கள் யாவை?**

- ➢ நிகண்டு, நீதிநூல்கள் முதலியனவும், நன்னூல், காரிகை, தண்டியலங்காரம் கணிதத்தில் கீழ்வாயிலக்கம், மேல்வாயிலக்கம், குழிமாற்று முதலியன பலவகை வாய்ப்பாடுகளும் அக்காலத்துக் கல்வி முறையில் மனனப்பயிற்சிக்கு உதவிய நுல்கள் ஆகும்.

### கூடுதல் வினா

**1. கிளிமூக்கு என்றால் என்ன?**

- ➢ சுவடியைக் கோக்கும் கயிற்றின் ஒருதலைப்பில் தடையாக, பனையோலையை ஈர்க்கோடு கிளிமூக்குப் போலக் கத்தரித்து அமைப்பார்கள். இதற்கு கிளிமூக்கு என்று பெயர்.

**2. சட்டம் என்றால் என்ன ?**

- ➢ மாணாக்கர்களுக்கு எழுதும் பழக்கம் நன்றாக உண்டாக வேண்டுமென்று, ஆசிரியர்கள் ஒவ்வொரு நாளும் அவர்களைத் தனித்தனியே ஏடுகளில் தாம் மேலே எழுதி அதைப் போல் எழுதிவரச் சொல்வார்கள். இதற்குச் சட்டமென்று பெயர்.

**3. மன்றம் (அ) அம்பலம் என்றால் என்ன?**

- ➢ ஊர்தோறும் பொதுவான இடத்தில் ஒரு பெரிய மரத்தினடியே மேடையொன்று அமைக்கப்பட்டிருக்கும். அதனை மன்றமென்றும் அம்பலமென்றும் கூறுவர்.
- ➢ மன்றமென்பது மரத்தடியில் உள்ள திண்ணையே. அதுவே பிறகு திண்ணைப் பள்ளிக்கூடமாக மாறியதென்று தோன்றுகிறது.

**4. எழுத்தாணிகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

எழுத்தாணிகள் மூன்று வகைப்படும்.

1. மடக்கெழுத்தாணி 2. வாரெழுத்தாணி 3. குண்டெழுத்தாணி

**5. உ.வே.சா பெற்ற பட்டங்களை எழுதுக?**

- ➢ மகாமகோபாத்தியாய, திராவிட வித்தியாபூஷணம், தாஷிணாத்திய கலாநிதி

**6. வேத்தான் என்பதன் பொருள் என்ன?**

- ➢ மற்றவர்களை விட வேறான தனிப்பெருமை உடையவன் என்று பொருள்.

**7. கீழ்க்காணும் சொற்களுக்குப் பொருள் தருக?**

**அ. வித்தியாரம்பம்** **ஆ. வித்தியாப்பியாசம்**

அ. வித்தியாரம்பம் - கல்வித்தொடக்கம் ஆ. வித்தியாப்பியாசம் - கல்விப்பயிற்சி

**8. முறை வைப்பு என்றால் என்ன?**

- ➢ ஆசிரியர் ஒன்றைச் சொல்ல அதை மாணவர்கள் பலரும் சேர்ந்து சொல்வதை "முறை வைப்பு" என்று கூறுவர்.

**9. நாராசம் என்றால் என்ன?**

- ➢ பனையேடு, சீதாளபத்திரம் முதலியவற்றில் எழுதுவது வழக்கம்
- ➢ இரட்டைத் துளையுள்ள ஏடுகளில் ஒரு துளையில் செப்புக்கம்பி (அல்லது) மூங்கிற் குச்சியைச் செருகிக் கட்டுவார்கள். அதற்கு 'நாராசம்' என்று பெயர்.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## திரைமொழி

### இயல் - 6
### புத்தக வினா

**1. பின்னணி இசை படத்தின் காட்சியமைப்புக்கு எவ்வாறு உயிரூட்டும்? சான்று தருக?**

- பின்னணி இசை திரைப்படத்தின் உணர்வுகளை வெளிக் கொணர உதவும் மற்றொரு கலை.
- பின்னணி இசைச் சேர்ப்பும், சிலவேளைகளில் மவுனமும் திரையில் உணர்வுகளை வெளிக்கொணர உதவுகின்றன.

**சான்று**

- கதைநாயகி சன்னல் வழியாகத் தலையை நீட்டி வெளியே தெரியும் ஒரு காட்சியை வெறித்துப் பார்க்கிறாள் எனில் தெரு காட்டப்படுவதில்லை.
- அவள் தெருவைப் பார்ப்பது மட்டுமே காட்டப்படுகிறது. அக்காட்சியில் ஒரு மகிழுந்து புறப்பட்டுச் செல்லும் ஒலி இணைக்கப்படுகிறது.
- இதில் அவளைப்பார்க்க வந்தவர், அவள் விருப்பத்திற்கு மாறாக அங்கிருந்து புறப்பட்டுச் செல்கிறார் என்ற கதை, அப்பெண்ணின் முகபாவனை மூலமே சொல்லப்படுகிறது.
- இசை பாத்திரங்களின் மனக்கவலைகள், அலைக்கழிப்புகள் ஆகியவற்றை எதிரொலிப்பதாகவும் எடுத்துக் காட்டுவதாகவும் இருக்க வேண்டும்.
- அது, நமக்குப் பாத்திரங்களின் உணர்வுகளுக்கு விரிவுரை வழங்குவதாக இருக்க வேண்டும். அதைப் போல மவுனம், உரையாடலை விட அதிகம் பேசுவதாக இருக்கும்.

### கூடுதல் வினா

**1. காட்சி மறைவு என்றால் என்ன?**

- காட்சிகள் மாறுவதை உணர்த்த ஒரு காட்சியைச் சிறிது சிறிதாக மங்கலாகக் காட்டி இருள் ஆக்கிக் காட்டுவர்.
- இதைக் காட்சி மறைவு (Fade Out) என்று கூறுவார்கள்.

**2. காட்சி உதயம் என்றால் என்ன?**

- ஒரு காட்சி மறைந்து அடுத்த காட்சி தொடங்கும் போது இருட்டாக இருந்த பகுதி சிறிது சிறிதாக வெளிச்சமாக மாறி முழுக்காட்சியும் வெளிப்படுவது "காட்சி உதயம்" (Fadein) எனப்படும்.

**3. கலவை / கூட்டு என்றால் என்ன?**

- ஒரு காட்சி மறையும் போதே அடுத்த காட்சி தெரியத் தொடங்கும். இதனைக் கலவை / கூட்டு (Mix) என்பர்.

**4. அழிப்பு என்றால் என்ன?**

- பழைய காட்சியை அழித்துக் கொண்டே அடுத்த காட்சி தோன்றுவதை அழிப்பு (Wipe) என்பர்.

**5. முப்பரிமாணக் கலை என்றால் என்ன?**

- திரைப்படத்தில், நடிப்பவரை முன் பின் மேல் என்று பல கோணங்களில் படப்பிடிப்புக் கருவியால் இடம் மாற்றி மாற்றிப் படம் பிடித்துத் திரையில் காட்டுவது முப்பரிமாணக் கலை என்று கூறுவர்.

**6. நேரேட்டர் (Narrator)என்பவர் யார்? (அல்லது) கதைச்சொல்லி என்று அழைக்கப்படுபவர் யார்?**

- திரையரங்களில் மவுனப்படங்கள் ஓடிக் கொண்டிருக்க திரைக்கு அருகே ஒருவர் ஒலி வாங்கியைப் பிடித்து கதை சொல்லும் காலமும் இருந்தது.
- அவருக்கு ஆங்கிலத்தில் நேரேட்டர் (Narrator - கதைச்சொல்லி) என்று பெயர் கூறுவர்.
- கதாநாயகன் போல மிடுக்காக உடை அணிந்து "நேரேட்டர்" எனும் அக்கதைச் சொல்லி வந்து நின்றாலே அனைவரும் கைத்தட்டத் தொடங்குவார்கள்.

**7. "ஒற்றைக் கோணக்கலை" என்பது என்ன?**

- நாடகம் என்பது ஒரு காட்சியை ஒற்றைக் கோணத்தில் மட்டும் நேரிடையாகக் காண்பது ஆகும்.
- நாடகத்தை ஒற்றைக் கோணக்கலை எனக்கூறுவர்

**8. திரைப்படக்கலை என்றால் என்ன?**

- தேவையான கோணங்களைப் பயன்படுத்திக் காட்சிகளைப் படம்பிடித்து அவற்றை வெட்டி ஒட்டி, படத்தொகுப்புச் செய்து வெள்ளித்திரையில் ஒரு நல்ல கதையைச் சொல்வதே திரைப்படக் கலை ஆகும்.

**9. சார்லி சாப்ளின் வெற்றியின் அடையாளம் என்று எதைக் கூறுலாம்?**

- சார்லி சாப்ளின் டிராம்ப் உருவம், குழந்தைமை, மனிதமை ஆகியவற்றின் குறியீடாக இடம் பெற்றிருப்பதே அவரது வெற்றியின் அடையாளம் ஆகும்



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# பகுதி – II (7x2=14)

## பிரிவு - 3 இலக்கணம்

## தமிழாய் எழுதுவோம்

**இயல் - 1**

**புத்தக வினா**

**1. முடிந்தால் தரலாம், முடித்தால் தரலாம் - இவ்விரு சொற்றொடர்கள் உணர்த்தும் பொருளை அறிந்து தொடர் அமைக்கவும்?**

**முடிந்தால் தரலாம் :**

இயன்றவரை முடிந்தால் உதவி செய்யலாம்

**முடித்தால் தரலாம் :**

எடுத்த செயல் முடித்தால் கொடுக்கலாம்

**2. தமிழில் பிழையின்றி எழுதுவதற்கு மேற்கொள்ள வேண்டிய முயற்சிகள் யாவை ?**

- ➢ எழுத்தினைத் தெளிவாக உச்சரிக்கப் பழக வேண்டும்.
- ➢ ந,ண,ன/ல,ள/ழ, ற,ர ஒலிப்பு வேறுபாடு அறிந்து ஒலிக்க வேண்டும்.
- ➢ தமிழில் இவ்வெழுத்துக்கள் வரும் முறையையும் பொருள் மாற்றத்தையும் அறிந்து கொள்ள வேண்டும்.
- ➢ தொடக்கத்தில் சிலகாலம் வாய்விட்டோ அல்லது மனதுக்குள் உச்சரித்தபடியோ எழுதிப் பழகுவது நல்லது.
- ➢ வேகமாக எழுத முயல்வது பிழைக்கு வழிகோலும்.
- ➢ கெ,கே,கொ,கோ போன்று கொம்புடைய குறில் நெடில் வேறுபாட்டினைப் புரிந்து எழுத வேண்டும்.

**கூடுதல் வினா**

**1. தமிழில் தவறில்லாமல் எழுத அறிய வேண்டியவை யாவை?**

மொழியின் இயல்பை அறிந்தும் கவனத்துடன் எழுதினால் பிழையில்லாமல் எழுதிட முடியும். சிறிதளவு முயற்சியும் பயிற்சியும் தவறில்லாமல் எழுதத் துணைபுரியும்.

- ➢ ந,ண,ன/ற,ர/ல,ள,ழ வேறுபாடு அறிதல்.
- ➢ உயிர்மெய் எழுத்துகளில் வரும் மேல்விலங்கு, கீழ்விலங்கு, கொம்புகள், துணைக்கால் போன்றவற்றில் கவனம் தேவை.

**2. ந,ண,ன,ற,ர,ல,ள,ழ ஆகிய எழுத்துகளில் வேறுபாடு அறிய வேண்டியன யாவை?**

- ➢ நகரம் சொல்லின் தொடக்கமாக மட்டுமே வரும்.
- ➢ நகரமெய் சொல்லின் இறுதியில் வராது.
- ➢ ண,ன,ர,ல,ள,ழ எழுத்துகள் சொல்லுக்கு இடையிலும் இறுதியிலும் வரும்.

**3. தமிழ்மொழியில் மெய்யெழுத்துகள் வரும் முறை யாது?**

- ➢ தமிழ்மொழியில் சொல்லின் தொடக்கமாக மெய்யெழுத்துகள் வருவதில்லை.
- ➢ வல்லின மெய்யோடு சொல் முடியாது.
- ➢ வல்லின மெய்கள் ஈரொற்றாய் வராது.
- ➢ ட், ற் என்னும் மெய்களை அடுத்து மெய்கள் வருவதில்லை.
- ➢ க்,ச்,த்,ப் ஆகியவற்றின்பின் அவ்வெழுத்து வரிசைகளே வரும். பிற மெய்கள் வராது.
- ➢ ட், ற் என்னும் மெய்களுக்கு பிறகு அவ்வெழுத்து வரிசைகளும் க,ச,ப என்னும் வரிசைகளுமே வரும்.

**4. தமிழ்மொழியில் மெல்லின எழுத்துகள் அமையும் முறை யாது?**

- ➢ மெல்லின எழுத்துகளில் ண, ன சொல்லின் தொடக்கத்தில் வராது.
- ➢ தனிச்சொல்லின் இடையிலும் வல்லினத்துக்கு முன் அவ்வல்லின மெய்யோடு இன மெல்லினமெய் எழுத்துகள் வரும். (தங்கை, பந்து, பாம்பு, பத்து, இஞ்சி, முதலியன)
- ➢ ஞ், ந், வ் எழுத்துகளில் முடியக் கூடிய சொற்கள் அரிதாக உள்ளன. (உரிஞ், வெரிந், பொருந், தெவ்)





Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

- ➢ **இந்திரன் - சீயஸ்பிடர், வருணன் - ஊரனாஸ், பலராமன் - டயானிசிஸ், கார்த்திகேயன் - மார்ஸ், சூரியன் - சோல், சந்திரன் - லூனஸ், விஸ்வகர்மன் - வன்கன், கணேசன் - ஜோனஸ், துர்க்கை - ஜீனோ, சரஸ்வதி - மினர்வா, காமன் - இராஸ்** என்று பல ஒப்புமைகள் உள்ளன.
- ➢ இவை இனமரபுகளை ஆய்வதற்கும் உதவக்கூடியவை ஆகும்.

**4. கண்ணகி கதை தொன்மையை நோக்கி வளர்ச்சிப் பெற்றதை எழுதுக?**

- ➢ இக்காலப் பெண்ணியத்திற்கான தொன்மமாகக் கண்ணகியும், பெண்ணியப் போராட்டத்திற்கான தொன்மமாக மதுரையை எரித்த நிகழ்வும் தொன்மங்களாக கையாளப்பட்டுள்ளன என்பதை "மதுரை எரிக்கக் கண்ணகியாயும்" என்ற புதுக்கவிதையால் அறியமுடிகிறது.

**5. மதுரை எரிக்கக் கண்ணகியாயும்**
**மீண்டும் எழுந்திடச் சீதையாயும்**
**எப்பவும் எரிதழல் மடிசுமப்பது இனி**
**எங்கள் வேலையல்ல - என்ற புதுக்கவிதையில் இடம் பெறும் தொன்மங்களை எழுதுக?**

- ➢ இக்காலப் பெண்ணியத்திற்கான தொன்மமாகக் கண்ணகியும் பெண்ணியப் போராட்டத்திற்கான தொன்மமாக மதுரையை எரித்த நிகழ்வும் கூறப்பட்டுள்ளன.

## குறியீடு

## இயல் - 8

### புத்தக வினா

**1. குறியீட்டு உத்தியில் ஒரு புதுக்கவிதை எழுதுக?**

- ➢ உடனிருந்த பூக்கள்
  உதிர்ந்ததைப் பார்த்த பின்னும்
  கொடியில் குதிக்கும்
  மலர்கள் குதூகலமாய்
  - இதில் "மரணத்தின்" குறியீடாக "மலர்கள் உதிர்வது" கூறப்பட்டுள்ளது.

**2. வியர்வை கவிதையில் வெளிப்படும் குறியீடுகளைக் குறிப்பிடுக.**

- ➢ வியர்வைத்துளிக்கு ஆதிரைப்பருக்கை குறியீடாகிறது
- ➢ செழிப்புக்கு அமுதசுரபி குறியீடாகிறது

**3. குறியீட்டு உத்தியின் அடிப்படை இலக்கணங்களை எழுதுக?**

- ➢ சுட்டிய பொருளுக்கும் குறியீட்டுப் பொருளுக்கும் ஏதேனும் ஒரு தொடர்பு இருத்தல் வேண்டும்
- ➢ சுட்டும் பொருள் என்பது எல்லோரும் அறிந்த ஒன்றாக இருத்தல் வேண்டும்
- ➢ இத்தொடர்பின் வாயிலாகக் குறியீட்டுப் பொருள் நுண்ணிய முறையில் வெளிப்படுத்தப்பட வேண்டும்.

### கூடுதல் வினா

**1. திட்டம் என்னும் தலைப்பில் "வரங்கள் சாபங்கள் ஆகுமென்றால் இங்கே தவங்கள் எதற்காக"? - என்ற கவிதையில் இடம்பெறும் குறியீட்டை எழுதுக?**

- ➢ திட்டங்கள் தீட்டினாலும் அவை நாட்டு நலனுக்குப் பயன்படாமல், எதிராகப் போய்விடுவதை இக்கவிதை உணர்த்துகிறது.
- ➢ வரம் திட்டத்திற்குக் குறியீடாகிறது.
- ➢ சாபம் அதன் பயனற்ற விளைவுக்குக் குறியீடாகிறது.

**2. வியர்வை என்னும் தலைப்பில் "இந்த ஆதிரைப்பருக்கைகள் வீழ்ந்ததும் பூமிப்பாத்திரம் அமுதசுரபி" - என்ற கவிதையில் இடம் பெறும் குறியீட்டை எழுதுக?**

- ➢ ஆதிரையிட்ட பருக்கையினால் அமுதசுரபியில் உணவு வளர்ந்து கொண்டே இருந்தது போல் உழைப்பால் உலகம் செழித்து வளர்கிறது என்ற கருத்து புலப்படுத்தப்படுகிறது.
- ➢ வியர்வைத்துளிக்கு ஆதிரைப்பருக்கை குறியீடாகிறது.
- ➢ செழிப்புக்கு அமுதசுரபி குறியீடாகிறது.

**3. குறியீடு என்றால் என்ன?**

- ➢ சொல்ல வந்ததை நேரடியாகச் சொல்லாமல் மற்றொன்றைக் குறிப்பால் உணர்த்துவது குறியீடு ஆகும்.
- ➢ மற்றொன்றைக் குறிப்பாக உணர்த்தும் பொருள் அல்லது சொல் "குறியீடு" எனப்படுகிறது.





Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**4. "குறியீட்டியம்" என்றால் என்ன?**

- ➢ குறியீடு என்ற உத்தி, ஆங்கிலத்தில் Symbol என வழங்கப்படுகிறது
- ➢ சிம்பல் என்பதற்கு ஒன்று சேர் என்பது பொருள்.
- ➢ மற்றொன்றைக் குறிப்பாக உணர்த்தும் பொருள் அல்லது சொல் "குறியீடு" எனப்படுகிறது.
- ➢ **குறியீட்டால் பொருளை உணர்த்துவது குறியீட்டியம் (symbolism) எனப்படுகிறது.**
- ➢ 19ஆம் நூற்றாண்டில் "குறியீட்டியம்" ஓர் இலக்கியக் கோட்பாடாக உருப்பெற்றது.

**5. குறியீட்டியம் கோட்பாட்டை விளக்கி வளர்த்தவர்களின் பெயர்களை எழுதுக.**

- ➢ பொதலேர், ரைம்போ, வெர்லேன், மல்லார்மே முதலானவர்கள் இக்கோட்பாட்டை விளக்கி வளர்த்தவர்கள் ஆவார்.

**6. "ஹார்ட்" வடமொழியில் குறிப்புப்பொருள் கோட்பாடு எவ்வாறு உருவானது என்று கூறுகிறார்?**

- ➢ தமிழின் செல்வாக்கினாலேயே வடமொழியில் குறிப்புப்பொருள் கோட்பாடு உருவானது என்று ஹார்ட் குறிப்பிட்டிருக்கிறார்.

**7. "உறுபுலி உருஏய்ப்பப் பூத்த வேங்கையைக்**
**கறுவு கொண்டு, அதன்முதல் குத்திய மதயானை**
**நீடு இருவிடர் அகம் சிலம்பக் கூய்த்தன்**
**கோடு புய்க்கல்லாது, உழக்கும்நாட! கேள்" - என்ற கபிலரின் பாடலில் வெளிப்படும் குறியீடுகளை எழுதுக?**

- ➢ இப்பாடலில் யானை, தலைவனுக்குக் குறியீடாக இடம்பெறுகிறது.
- ➢ தலைவியுடனான திருமணத்தைத் தோழி வலியுறுத்தியதை விரும்பாத தலைவன் அக்கூற்றை மறுத்ததற்கு, யானை வேங்கை மரத்தைக் குத்தியது குறியீடாகிறது.
- ➢ தோழி கூற்றை வேண்டாததாகக் கருதித் தலைவன் வருந்துதலுக்குத் தந்தத்தை எடுக்க இயலாது யானை தவிப்பது குறியீடாகிறது.

**8. "கோழிலை வாழைக்கோள்முதிர் பெருங்குலை**
**ஊழுறு தீங்கனி, உண்ணுநர்த் தடுத்த" - எனத்தொடங்கும் கபிலரின் அகநானூற்றுப்பாடலில் இடம்பெறும் குறியீட்டை எழுதுக?**

- ➢ ஆண்குரங்கின் செயல் தலைவனின் செயலுக்கும், சுனைநீர்த் தேறல் தலைவன் கொண்டுள்ள இன்பந்தரும் மயக்கத்திற்கும், சந்தன மரத்தில் ஏறுவதற்கு முடியாமல் பூக்களாகிய படுக்கையில் குரங்கு விழுந்து கிடக்கும் செயல், திருமணம் செய்து கொள்ளாமல் இன்பத்தை மட்டும் நுகர நினைக்கும் தலைவனது செயலுக்கும் குறியீடாக அமைந்துள்ளதை அறியலாம்.

**9. குறியீட்டின் பயன்பாடு பற்றி எழுதுக?**

- ➢ புதிர்போல அமைந்து இன்பமளிக்கிறது, உணர்வளிக்கிறது, புரிதலை அளிக்கிறது.
- ➢ மறைத்துச் சொல்லவும், மிகுத்துச்சொல்லவும், அழுத்திச் சொல்லவும் குறியீடு பயன்படுகிறது.

**10. குறியீடு என்பது ஒரு புதிய வடிவம் அன்று - இக்கூற்றை விளக்குக?**

- ➢ குறியீடு என்பது ஒரு புதிய வடிவம் அன்று
- ➢ சங்க இலக்கியப் பாடல்களில் வரும் உள்ளுறை உவமம் என்னும் இலக்கிய உத்தியும் இன்றைக்குக் குறியீடு என்று நாம் குறிப்பிடும் உத்தியும் ஒன்றுதான்.
- ➢ சங்க காலந்தொட்டே தமிழர்க்கு குறியீட்டுச் சிந்தனை இருந்ததை நம்மால் அறியமுடிகிறது.
- ➢ உள்ளுறை உவமம் அகஇலக்கியங்களில் உரைக்க முடியாதவை, மறைக்க வேண்டுபவை ஆகியவற்றைக் குறிப்பாக உணர்த்தப் பயன்பட்டது.
- ➢ குறியீடு என்பது அகம், புறம் என எல்லாவகைக் கவிதைகளிலும் குறிப்பாக உணர்த்தப் பயன்படும் இலக்கிய உத்தியாகும்.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## 2. குறிப்புகளில் மறைந்திருக்கும் தமிழறிஞர்களைக் கண்டுபிடிப்போம்

**புத்தக வினா**

1. **தமிழறிஞர் : முதலிரு எழுத்துகளால் மறைக்கலாம்**
   மறைமலை அடிகள்
2. **தாய்மொழி : ஈற்றிரு எழுத்துக்கள் வெளிச்சம் தரும்**
   தமிழ் ஒளி
3. **சிறுகதை ஆசிரியர் : முதல் பாதி நவீனம்**
   புதுமைப்பித்தன்
4. **முன்னெழுத்து அரசன்: பின்னெழுத்து தமிழ் மாதம்**
   கோதை
5. **கவிஞர் ஈற்றிரு சொல்லால் அணிகலன் செய்யலாம்**
   கவிமணி

(தமிழ்ஒளி, அம்பை, கோதை, அசோகமித்தரன், புதுமைப்பித்தன், சூடாமணி, ஜெயகாந்தன், மறைமலையடிகள்)

**இயல் - 2**

1. ## ஆங்கிலச்சொற்கள் இணையான தமிழ்ச்சொற்கள்

**புத்தக வினா**

எ.கா. Green Belt movement – பசுமை வளாக இயக்கம்

1) Founded – தோற்றுவித்தவர்
2) Thirty years – முப்பது ஆண்டுகள்
3) Many Women – பல பெண்கள்
4) Trees – மரங்கள்
5) Food – உணவு
6) Fuel – எரிபொருள்
7) Election – நேர்தல்
8) Elected – தேர்வு
9) Parliament – நாடாளுமன்றம்
10) Nobel Prize – நோபல் பரிசு
11) Democracy – மக்களாட்சி
12) Generation – தலைமுறை
13) Thirty Million Trees – மூன்று கோடி மரங்கள்
14) Transformed – மறுமலர்ச்சி
15) Desertification – பாலைவனமாதல்
16) Deforestation – காடுகளை அழித்தல்
17) Thirty Million – மூன்று கோடி
18) Minister of Environment – சுற்றுச்சூழல் அமைச்சர்
19) Thousand of Women – பல்லாயிரக்கணக்கான பெண்கள்
20) Social forestry schemes – சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டம்

## படிப்போம் பயன்படுத்துவோம்

**கூடுதல் வினா**

**இயல் - 1**

1. Subscription - உறுப்பினர் கட்டணம்
2. Fiction - புனைவு
3. Biography - வாழ்க்கை வரலாறு
4. Archive - ஆவணம்
5. Manuscript - கையெழுத்துப் பிரதி
6. Bibliography- நூல் நிரல்

**இயல் - 3**

1. Lobby - ஓய்வறை
2. Tips - சிற்றீகை
3. Checkout - வெளியேறுதல்
4. Mini meals - சிற்றுணவு

**இயல் - 2**

1. Platform - நடைமேடை
2. Train Track - இருப்புப்பாதை
3. Railway Signal - தொடர்வண்டி வழிக்குறி
4. Ticket Inspector - பயணச்சீட்டு ஆய்வர்
5. Level Crossing - இருப்புப் பாதையைக் கடக்குமிடம்
6. Metro Train - மாநகரத் தொடர் வண்டி

**இயல் - 4**

1. Arrival - வருகை
2. Departure - புறப்பாடு
3. Conveyor Belt - ஊர்திப்பட்டை
4. Take Off - வானூர்தி கிளம்புதல்
5. Passport - கடவுச்சீட்டு
6. Visa - நுழைவு இசைவு
7. Domestic Flight - உள்நாட்டு வானூர்தி



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

## இயல் - 5

| | | | |
|---|---|---|---|
| 1. | மலரடி | - | உவமைத்தொகை |
| 2. | மறவா | - | ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் |
| 3. | வளர்தலம் | - | வினைத்தொகை |
| 4. | மாமயிலை | - | உரிச்சொற்றொடர் |
| 5. | பெருங்கடல் | - | பண்புத்தொகை |
| 6. | உழாஅது | - | செய்யுளிசை அளபெடை |
| 7. | வெரீஇய | - | சொல்லிசை அளபெடை |

## இயல் - 6

| | | | |
|---|---|---|---|
| 1. | தொல்நெறி | - | பண்புத்தொகை |
| 2. | ஆடலும் பாடலும் | - | எண்ணும்மை |
| 3. | நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை | - | தொழிற்பெயர்கள் |
| 4. | **ஒரீஇ** | - | **சொல்லிசை அளபெடை** |
| 5. | **படுப்பதூஉம்** | - | **இன்னிசை அளபெடை** |
| 6. | **சொல்லுதல்** | - | **தொழிற்பெயர்** |

## இயல்-7

| | | | |
|---|---|---|---|
| 1. | காய்நெல் | - | வினைத்தொகை |
| 2. | புக்க | - | பெயரெச்சம் |
| 3. | அறியா | - | ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் |

## இயல் - 8

| | | | |
|---|---|---|---|
| 1. | கருந்தடம், வெங்குருதி | - | பண்புத்தொகைகள் |
| 2. | வெந்து, சினந்து, போந்து | - | வினையெச்சங்கள் |
| 3. | உன்னலிர் | - | முன்னிலைப் பன்மை வினைமுற்று |
| 4. | ஓர்மின் | - | ஏவல் பன்மை வினைமுற்று |
| 5. | சொற்ற, திருந்திய | - | பெயரெச்சங்கள் |
| 6. | பாதகர் | - | வினையாலணையும் பெயர் |
| 7. | ஊன்ற ஊன்ற | - | அடுக்குத்தொடர் |
| 8. | வாய்த்த, உவப்ப கொடுத்த,ஈந்த | - | பெயரெச்சங்கள் |
| 9. | கவா அன் | - | செய்யுளிசை அளபெடை |
| 10. | தடக்கை | - | உரிச்சொல் தொடர் |
| 11. | நீலம் | - | ஆகுபெயர் |
| 12. | அருந்திறல் | - | பண்புத்தொகை |
| 13. | நெடுவழி | - | பண்புத்தொகை |
| 14. | வெள்ளருவி | - | பண்புத்தொகை |
| 15. | நெடுவேல் | - | பண்புத்தொகை |
| 16. | நன்மொழி | - | பண்புத்தொகை |
| 17. | நன்னாடு | - | பண்புத்தொகை |
| 18. | கடல்தானை | - | உவமைத்தொகை |
| 19. | அரவக்கடல் | - | இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை |
| 20. | மலைதல் | - | தொழிற்பெயர் |
| 21. | விரிகடல் | - | வினைத்தொகை |

www.Padasalai.Net www.CBSEtips.in



## புணர்ச்சி விதி தருக.

### புத்தக வினா

### இயல் - 3

**5. செல்லிடத்து - புணர்ச்சி விதி கூறுக.**

➢ செல்லிடத்து - செல் + இடத்து
விதி : 1 தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும் - செல் + ல் + இடத்து
விதி : 2 உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே - செல்லிடத்து

### இயல் - 6

**1. பெருந்தேர் புணர்ச்சி விதி கூறுக.**

➢ பெருந்தேர் - பெருமை + தேர்
விதி : 1 ஈறுபோதல் - பெரு + தேர்
விதி : 2 இனமிகல் - பெருந்தேர்

### கூடுதல் வினா

### இயல்-1

1. **செம்பரிதி = செம்மை + பரிதி**
விதி : ஈறுபோதல் - செம் + பரிதி - செம்பரிதி

2. **வானமெல்லாம் = வானம் + எல்லாம்**
விதி : உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே - வானமெல்லாம்

3. **உன்னையல்லால் = உன்னை + அல்லால்**
விதி : 1 இஈஐ வழி யவ்வும் - உன்னை + ய் + அல்லால்
விதி : 2 உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே - உன்னையல்லால்

4. **செந்தமிழே = செம்மை + தமிழே**
விதி : 1 ஈறுபோதல் - செம் + தமிழே
விதி : 2 முன்னின்ற மெய் திரிதல் - செந்தமிழே

Padasalai

5. **ஆங்கவற்றுள் = ஆங்கு + அவற்றுள்**
விதி : 1 உயிர்வரின் உக்குறள் மெய் விட்டோடும் - ஆங்க் + அவற்றுள்
விதி : 2 உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே - ஆங்கவற்றுள்

6. **தனியாழி = தனி + ஆழி**
விதி : 1 இஈஐ வழி யவ்வும் - தனி + ய் +ஆழி
விதி : 2 உடல்மேல் உயிர்வந்து ஒன்று இயல்பே - தனியாழி

7. **வெங்கதிர் = வெம்மை + கதிர்**
விதி : 1 ஈறுபோதல் - வெம் + கதிர்
விதி : 2 முன்னின்ற மெய் திரிதல் - வெங்கதிர்

### இயல் - 2

1. **இனநிரை = இனம் + நிரை**
விதி : மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும் - இனநிரை

2. **புதுப்பெயல் = புதுமை + பெயல்**
விதி : 1 ஈறுபோதல் - புது + பெயல்
விதி : 2 இயல்பினும் விதியினும் நின்ற உயர்முன் கசதப மிகும் - புதுப்பெயல்

### இயல்- 3

1. **அருங்கானம் = அருமை + கானம்**
விதி : 1 ஈறுபோதல் - அரு + கானம்
விதி : 2 இனமிகல் - அருங்கானம்



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## பொருள் கூறுக

### இயல் - 2

- புதுப்பெயல் - புதுமழை
- ஆர்கலி - வெள்ளம்
- கொடுங்கோல் - வளைந்த கோல்
- புலம்பு - தனிமை
- கண்ணி - தலையில் சூடும் மாலை
- கவுள் - கன்னம்
- மா - விலங்கு

### இயல் - 3

- அமலன் - இராமன்
- இளவல் - தம்பி
- நளிர்கடல் - கடல் குளிர்ந்த
- துன்பு - துன்பம்
- உன்னேல் - எண்ணாதே
- அனகன் - இராமன்
- உவா - அமாவாசை
- உடுபதி - சந்திரன்
- செற்றார் - பகைவர்
- வெகுளி - கோபம்
- புணை - தெப்பம்
- கிளை - உறவினர்
- அனயம் - நிறைவானது
- கொராமுனுசு - கிராம நிர்வாக அலுவலர்
- வெதப்பெட்டி - விதைப்பெட்டி
- வெள்ளங்காட்டி - விடியற்காலை
- திருகை - மாவு அரைக்கும் கல்
- குறுக்கம் - சிறிய நிலப்பரப்பு
- கடகம் - ஓலைப்பெட்டி
- ஏமம் - பாதுகாப்பு
- திரு - செல்வம்

### இயல் - 4

- உரன் - வலிமை
- கலன் - யாழ்
- மழு - கோடரி
- வித்தியாப்பியாசம் - கல்விப் பயிற்சி
- உபாத்தியாயர் - ஆசிரியர்
- அக்ஷராப்பியாசம் - எழுத்துப் பயிற்சி
- சீதாள பத்திரம் - தாழை மடல்
- கலப்பை - கருவிகளை வைக்கும் பை
- கீழ்வாயிலக்கம் - பின்ன எண்ணின் கீழ்த்தொகை
- மேல்வாயிலக்கம் - பின்ன எண்ணின் மேல்தொகை
- நவத்வீபம் - வங்காளத்தில் உள்ள ஓர் ஊர்
- வித்தியாரம்பம் - கல்வித் தொடக்கம்
- குழிமாற்று - பெருக்கல் வாய்பாடு

### இயல் - 5

- மலிவிழா - விழாக்கள் நிறைந்த
- மடநல்லார் - இளமை பொருந்திய பெண்கள்
- கலிவிழா - எழுச்சி தரும் விழா
- ஒலிவிழா - ஆரவார விழா
- வேட்டம் - மீன்பிடித்தல்
- கழி - உப்பங்கழி
- செறு - வயல்
- கொள்ளை - விலை
- என்றூழ் - சூரியனின் வெப்பம்
- விடர் - மலைவெடிப்பு
- உமணர் - உப்பு வணிகர்
- எல்வளை - ஒளிரும் வளையல்
- தெளிர்ப்ப - ஒலிப்ப
- விளிஅறி - குரல்கேட்ட
- ஞமலி - நாய்
- வெரீஇய - அஞ்சிய
- மதர்கயல் - அழகிய மீன்
- புனவன் - கானவன்
- அள்ளல் - சேறு
- பகடு - எருது
- கதழ் - விரைவு
- பலிவிழா - திசைதோறும் பூசையிடும் உத்திரவிழா





Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## பகுதி – III (3x4=12)

### செய்யுள் - சிறுவினா

### இளந்தமிழே - சிற்பி பாலசுப்பிரமணியம்

**இயல் - 1**

**புத்தக வினா**

1. **"செம்பரிதி மலைமேட்டில் தலையைச் சாய்ப்பான்**
**செந்நிறத்துப் பூக்காடாம் வான மெல்லாம்!" இத்தொடர் வெளிப்படுத்தும் காட்சி நயத்தை விளக்குக?**

➢ அதிகாலை முதலே, கடுமையாக உழைத்துக் களைத்துச் சிவந்து போன மாலைச் சூரியன் மலை முகடுகளில் தலையைச் சாய்ப்பான்.

➢ வானமெல்லாம் சிவந்த பூக்காடாக மாறிக் காட்சியளித்தது.

➢ வானம் சிவப்பானதும் சிவந்த பூக்காடாக மாறுவதும் கவிஞரின் கற்பனைநயம் வெளிப்படுகிறது.

➢ ஓயாமல் உழைக்கும் தொழிலாளர்கள் கைகள் சிவந்திருப்பது, சூரியனின் சிவந்த நிறத்தை ஒத்திருகின்றது.

➢ சிவப்பு நிறமே உலகை ஆளும் வானத்தை ஆளும் என்பது செந்நிறத்தை உவமையாக கவிஞர் காட்டுகிறார்.

2. **பின்வரும் இருபாக்களின் கருத்துகளிலுள்ள வேற்றுமையை எடுத்துக்காட்டு.**

| | |
|---|---|
| பழையன கழிதலும் புதியன புகுதலும்<br>வழுவல கால வகையி னானே<br>- நன்னூல் | மீண்டுமந்தப் பழமைநலம் புதுக்கு தற்கு<br>மெய்சிலிர்க்கத் தமிழ்க்குயிலே ! கூவி வா, வா!<br>- சிற்பி பாலசுப்பிரமணியம் |

➢ காலமாறுபாட்டிற்கு ஏற்ப, "பழையது கழியலாம் புதியன தோன்றலாம் குற்றமல்ல" என்று நன்னூல் கூறுகிறது.

➢ புதுமைநலம் இல்லாமல் பழமைநலம் வேண்டும் எனச் சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுகிறார்.

➢ சங்ககாலத் தமிழ் பல பாடல்களைத் தந்தது. கடையெழு வள்ளல்கள் நாட்டை செழுமையுடன் ஆண்டனர். அக்காலம் மீண்டு வருவதற்கு தமிழ்க்குயிலே கூவி வா! வா! என மெய்சிலிர்க்க வேண்டுகிறார். புத்துயிர் பெற வேண்டுமெனக் கவிஞர் சிற்பியின் பாடல் கூறுகிறது.

**கூடுதல் வினா**

1. **சிற்பி பாலசுப்பிரமணியம் - குறிப்பு வரைக?**

➢ "நிலவுப்பூ" கவிதைத் தொகுப்பின் ஆசிரியர்.

➢ கவிஞர், பேராசிரியர், மொழிபெயர்ப்பாளர், இதழாசிரியர் எனப் பன்முகம் கொண்டவர்

➢ பாரதியார் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப்பேராசிரியராகப் பணியாற்றியவர்.

➢ "ஒரு கிராமத்து நதி" என்னும் கவிதை நூலிற்கு இருமுறை சாகித்ய அகாதமி விருது பெற்றவர்.

➢ ஒளிப்பறவை, சர்ப்பயாகம், சூரியநிழல், ஒரு கிராமத்து நதி, பூஜ்யங்களின் சங்கிலி முதலிய கவிதை நூல்களை இயற்றியவர்.

➢ இலக்கியச் சிந்தனைகள், மலையாளக்கவிதை, அலையும் சுவடும் உள்ளிட்ட உரைநடை நூல்களையும் எழுதியுள்ளார்.

➢ சாகித்திய அகாதெமி செயற்குழு உறுப்பினராகவும் உள்ளார்.

### தன்னேர் இலாத தமிழ் - தண்டியலங்கார உரை மேற்கோள் பாடல்

**புத்தக வினா**

1. **"ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும்" - இடஞ்சுட்டிப்பொருள் விளக்குக.**

இடம் : இவ்வரிகள் தண்டியலங்காரம் நூலில் பொருளணியியல் பகுதியில் இடம் பெற்றுள்ளது. இந்நூலின் ஆசிரியர் தண்டி ஆவார்.

பொருள் : ஒலிக்கின்ற அலை கடலால் சூழப்பட்ட இவ்வுலகத்தின் இருளை அகற்றும் என்பது இவ்வரியின் பொருளாகும்.

விளக்கம் :

1. மக்களால் போற்றப்பட்டு, உயர்ந்த மலைகளுக்கிடையே தோன்றி, கடலால் சூழப்பட்ட உலகத்தின் இருளைப் போக்குவது ஒன்று.
2. சான்றோரால் தொழப்பட்டு, மக்களின் அறியாமையைப் போக்கும் தன்மை இருப்பது இன்னொன்று.
3. இவ்விரண்டும் இருளைப் போக்கும் தன்மை உடையது. இவ்விரண்டில் ஒன்று கதிரவனுக்கு உண்டு. மற்றொன்று தனக்கு நிகரில்லாத தமிழ்.





Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## புறநானூறு

**புத்தக வினா**

**1. வாயிலோயே எனத் தொடங்கும் ஔவையாரின் புறநானூற்றுப் பாடல் பாடாண்திணைக்கு உரியது என்பதை நிறுவுக.**

**பாடாண்திணை**

ஒருவனுடைய புகழ், வலிமை, கொடை, அருள் போன்ற நல்லியல்புகளை சிறப்பித்துக் கூறுவது பாடாண்திணையாகும்.

**சான்று**

வாயிலோயே ! வாயிலோயே ! -எனத் தொடங்கும் புறநானூற்று ஔவையார் பாடலில் நெடுமான் அஞ்சியின் கொடைச்சிறப்பைக் கூறுவதாகும்.

**விளக்கம்**

பரிசில் பெற விரும்பும் புலவருக்கு வாயிலை அடைக்காத வாயிற் காவலனே! அதியமான் தன்னை அறியாதவனோ? அறிவும் புகழும் உடையோர் இந்த உலகில் மாய்ந்துவிடவில்லை. தொழில்வல்ல தச்சனின் பிள்ளைகளுக்கு காட்டில் ஏதாவதொரு மரம் கிடைப்பதுபோல, கலைத்தொழிலில் வல்லமை மிக்க புலவர்களுக்கு இவ்வுலகில் எத்திசையில் சென்றாலும் அத்திசையில் சோறு தவறாது கிடைக்கும். அறிவால் புகழ் விளையும் இவற்றைக் கற்றுக் கொண்டு கவிதை எழுதுவோருக்குப் புகழும் சிறப்பும் விளையும்.

**பொருத்தம்**

இப்பாடலில் அதியமான் நெடுமான் அஞ்சியின் கொடைச்சிறப்பைக் கூறுவதால் பாடாண் திணைக்குப் பொருத்தமாயிற்று.

## தெய்வமணிமாலை - இராமலிங்க அடிகள்

**இயல் - 5**

**புத்தக வினா**

**1. இராமலிங்க அடிகள் கந்தவேளிடம் எத்தகையோர் உறவு வேண்டுமெனக் கேட்கிறார்?**

- ஒரு நெறிப்பட்ட மனத்துடன் இறைவனது மலர் போன்ற திருவடிகளை நினைக்கின்ற உத்தமர்களின் உறவு தனக்கு வேண்டும் என்று கூறுகிறார்.
- தம் உள்ளத்தில் ஒன்றை நினைத்துக் கொண்டு புறத்தில் வேறொன்றாகப் பேசும் வஞ்சகர்களின் உறவு தனக்கு ஏற்படாமல் காக்குமாறு இறைவனிடம் வள்ளலார் வேண்டுகிறார்.

## தேவாரம் - திருஞானசம்பந்தர்

**2. பங்குனி உத்திரத் திருவிழா நடைபெற்ற முறையைத் திருஞானசம்பந்தர் எவ்வாறு பதிவு செய்கிறார்?**

- இளம் பெண்கள் ஆரவாரத்தோடு கொண்டாடும் திருவிழாக்கள் நிறைந்த வீதிகளையுடைய பெரிய ஊர் திருமயிலை.
- அங்கு எழுச்சிமிக்க விழாக்கள் நிகழும்.
- மயிலை கபாலீச்சரம் என்னும் கோவிலில் வீற்றிருக்கும் இறைவனுக்குப் பூசையிடும் பங்குனி உத்திர ஆரவார விழாவினைக் காணாமல் செல்வது முறைஆகுமா? என்று கேட்கிறார் திருஞானசம்பந்தர்.

## அகநானூறு - அம்மூவனார்

**3. நெல்லின் நேரே வெண்கல் உப்பு - இத்தொடரின் வழி பண்டமாற்று வணிகத்தை விளக்குக?**

- பண்டமாற்று என்பதன் பொருள் ஒரு பொருளுக்காக வேறு ஒரு பொருளை பரிமாற்றிக் கொள்ளுதல்.
- பழங்காலத்தில் தமிழ்நாட்டில் சந்தைக்குரிய பொருளாக உப்பு விளங்கியது.
- உப்பு விளையும் களத்திற்கு "அளம்" என்று பெயர்.
- பரதவர் நிலப்பரப்பில் உப்பளங்களில் உழவு செய்யாமலே உப்பு விளைவிப்பர்.
- அந்த வெண்ணிறக்கல் உப்பை, உப்பு வணிகர் தங்களது வண்டியில் ஏற்றிச்செல்வர்.
- வண்டியில் பூட்டிய எருதுகளை விரட்டக் கையில் தாழ்கோல் வைத்திருப்பர்.
- கோடைக்காலத்தின் வெப்பத்தால் பிளவுப்பட்ட குன்றைக் கடந்து தொலைவில் உள்ள ஊர்களில் விற்பனை செய்வர்.
- அம்மூவனாரின் அகநானூற்றுப் பாடலில் தலைவி "உப்புக்கு மாற்றாக நெல்லைத் தந்து உப்பினைப் பெற்றுக் கொள்ள வாரீரோ" என்று கூவுகிறார்.
- இத்தொடர்மூலம், பிறநிலங்களில் கிடைக்கும் பொருள்களை உமணர்கள் உப்பிற்குப் பண்டமாற்றாகப் பெற்றனர் என்பதை அறியலாம்.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**6. திண்ணைப் பள்ளிக்கூடங்களும் அண்ணாவிகளும் குறித்து எழுதுக?**

- ➢ வெள்ளக்கால் ப. சுப்பிரமணியனார் - திருநெல்வேலி தெற்குத்தெரு கணபதியார் திண்ணைப்பள்ளி
- ➢ மா. இராசமாணிக்கனார் - மௌனகுரு
- ➢ பின்னத்தூரர் நாராயணசாமி - கிருஷ்ணாபுரம் முத்துராம பாரதி திண்ணைப்பள்ளி
- ➢ நாவலர் சோமசுந்தர பாரதியார் - எட்டையபுரம் திண்ணைப்பள்ளி
- ➢ நா.மு.வேங்கடசாமி - வல்லம் குருசாமி வாத்தியார் திண்ணைப்பள்ளி
- ➢ வ.சுப.மாணிக்கம் - மகிபாலன்பட்டி நடேசனார் திண்ணைப்பள்ளி

## மதராசப்பட்டினம்

### இயல் - 5
### புத்தக வினா

**1. சென்னையின் பண்பாட்டு அடையாளங்களில், இன்றும் நிலைத்து இருப்பனவற்றைக் குறிப்பிடுக?**

- ➢ இந்திய சாரசனிக் கட்டடக்கலை பாணியில் கட்டப்பட்ட பல கட்டடங்கள் இன்றும் சென்னையின் பழமையைப் பறைசாற்றுபவை.
- ➢ ஆங்கிலேயர் உருவாக்கிய "மெட்ராஸ் ரெக்காட் ஆபிஸ்" சாரசனிக் கட்டடமுறையில் அமைந்தது. இது, இன்று தமிழ்நாடு ஆவணக்காப்பகம் என்று வழங்கப்படுகிறது.
- ➢ தென்னிந்திய வரலாற்றை அறிவதற்கும் பண்பாட்டைப் புரிந்து கொள்வதற்கும் பேருதவி புரியும் எழும்பூர் அருங்காட்சியகமும் கோட்டை அருங்காட்சியகமும் சென்னையின் அடையாளத்தைப் பேணுபவையாகும்.
- ➢ சென்னையின் புகழ்பெற்ற கட்டடங்களான மத்தியத் தொடர்வண்டி நிலையம், தென்னகத் தொடர் வண்டித் தலைமையகம், எழும்பூர் தொடர்வண்டி நிலையம், பொது அஞ்சல் அலுவலகம், உயர்நீதிமன்றம், சென்னைப் பல்கலைக் கழகம், ரிப்பன் கட்டடம், விக்டோரியா அரங்கு போன்றவை, இந்திய - சாரசனிக் கட்டடக்கலையின் சிறப்புகளை நமக்குக் காட்டுகின்றன.
- ➢ இந்தியாவின் முதல் பொது நூலகமான கன்னிமாரா நூலகம் நவீனமாக வளர்ந்து வரும் பெரிய நூலகமாகும்.
- ➢ இந்தியத் திரைப்படத் துறையின் வளர்ச்சியில் பெரும்பங்காற்றிய சென்னைக்குத் திரைப்படத் தொழில் சார்ந்த இடங்கள், திரையரங்கம் ஆகியவை குறிப்பிடத்தக்க அடையாளங்களாகும்.

### கூடுதல் வினா

**1. அறிவின் நகரம் சென்னை என்பதற்கானச் சான்றுகள் நான்கு தருக?**

- ➢ 1715-இல் உருவான "புனித மேரி தேவாலய தர்மப்பள்ளி" ஆசியாவில் உருவான முதல் ஐரோப்பியக் கல்வி முறையிலான பள்ளியாகும். 1812-இல் உருவான சென்னைக் கோட்டைக் கல்லூரி.
- ➢ 1837-இல் தொடங்கப்பட்ட கிறித்துவக் கல்லூரி.
- ➢ 1840-இல் உருவான பிரசிடென்சி பள்ளி போன்ற பல்வேறு கல்வி நிறுவனங்கள் சென்னையின் கல்வி வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றின.
- ➢ பல்வேறு தென்னிந்தியப் பல்கலைக்கழகங்களுக்கும் வேராக இருந்து 19-ஆம் நூற்றாண்டின் அறிவுப் புரட்சியில் பெரும் பங்காற்றிய சென்னைப் பல்கலைக் கழகம் 1857-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.
- ➢ 1914-இல் பெண்களுக்கெனத் தொடங்கப்பட்ட இராணிமேரி கல்லூரி பெண் கல்வி வரலாற்றில் குறிப்பிடத்தக்க கல்வி நிறுவனம் ஆகும்.
- ➢ ஆங்கிலேயரின் நிதி உதவியின்றி இந்தியர் ஒருவரால் உருவாக்கப்பட்ட கல்வி நிறுவனம் பச்சையப்பன் கல்லூரி.
- ➢ மருத்துவக்கல்லூரி, ஆசிரியப் பயிற்சிக்கல்லூரி, மாற்றுத்திறனாளிகளுக்கான பள்ளி எனச் சென்னை நகரின் கல்விக்கூடங்கள் பலவும் தமிழ்ச் சமூகத்தில் பெரும் அசைவுகளை ஏற்படுத்தின.

**2. இந்தோ - சாரசனிக் கட்டடக் கலை குறித்து எழுதுக?**

- ➢ முகலாயக் கட்டடக்கலை, பிரித்தானியக் கட்டடக்கலை, இந்தியப் பாரம்பரிய பாணி ஆகியவற்றைக் கலந்து உருவாக்கப்பட்டது.
- ➢ இப்பாணியில் 1768-இல் கட்டி முடிக்கப்பட்ட முதல் கட்டடம் சேப்பாக்கம் அரண்மனையே ஆகும்.
- ➢ சென்னையின் புகழ்பெற்ற கட்டடங்களான மத்தியத் தொடர்வண்டி நிலையம், தென்னகத் தொடர்வண்டித் தலைமையகம், எழும்பூர் தொடர் வண்டி நிலையம், பொது அஞ்சல் அலுவலகம், உயர்நீதி மன்றம், சென்னைப் பல்கலைக் கழகம், ரிப்பன் கட்டடம், விக்டோரியா அரங்கு போன்றவை இந்திய - சாரசனிக் கட்டடக் கலையின் சிறப்புகளை நமக்குக் காட்டுகின்றன.



• ஞானம் • ஜெயம் • மகிழ்ச்சி

Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## பிரிவு – 3 (3x4=12)

### அணிகள்

**இயல் - 1**

**1. பொருள் வேற்றுமையணியைச் சான்றுடன் விளக்குக.**

**அணி இலக்கணம் :** இருவேறு பொருள்களுக்கு இடையே ஒற்றுமையை முதலில் கூறிப் பின்னர் ஒன்றை மட்டும் வேறுபடுத்திக் காட்டுவது பொருள் வேற்றுமை அணியாகும்.

**சான்று**

ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத்(து) இருளகற்றும் - ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன்(று) ஏனையது
தன்னேர் இலாத தமிழ் !
- தண்டியலங்காரம்

**விளக்கம் :** மக்களால் போற்றப்படும், உயர்ந்த மலைகளுக்கு இடையே தோன்றி, கடலால் சூழப்பட்ட உலகத்தின் புற இருளை அகற்றுவது ஒன்று . பொதிகை மலையில் தோன்றி, சான்றோர்களால் தொழப்பட்டு, மக்களின் அக அறியாமையைப் போக்குவது இன்னொன்று. இவ்விரண்டில் ஒன்று கதிரவன்; மற்றொன்று தன்னிகர் இல்லாத தமிழ்மொழியாகும்.

**பொருத்தம் :** தமிழ்மொழிக்கும் கதிரவனுக்கும் இடையே உள்ள ஒற்றுமையைக் கூறிப் பின்னர் தன்னிகர் இல்லாத தமிழை வேறுபடுத்திக் காட்டுவதால் இது பொருள் வேற்றுமை அணியாகும்.

**இயல் - 3**

**1. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது
- இக்குறட்பாவில் பயின்றுவரும் அணியை விளக்குக**

**குறளில் பயின்று வரும் அணி :**

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது
- இக்குறட்பாவில் **நிரல்நிறை அணி** பயின்று வந்துள்ளது

**அணிவிளக்கம்**

நிரல் = வரிசை நிறை = நிறுத்துதல்

சொல்லையும் பொருளையும் வரிசையாக நிறுத்துதல் என் பொருள்படும். வரிசைப்படி இணைத்துப் பொருள் கொள்வது நிரல்நிறை அணியாகும்.

**பாடலின் பொருள்**

அன்பும் அறனும் உடையதாக இல்வாழ்க்கை விளங்குமானால் அதுவே பண்பும் பயனும் அதுவே ஆகும்.

**அணிப்பொருத்தம்**

இக்குறளின் **அன்பும், அறனும்** என்ற சொற்களை வரிசையாக நிறுத்தி, **பண்பும், பயனும்** என்ற சொற்களை முறையாக கூறியுள்ளதால் நிரல்நிறை அணியாகும்.

**2. கீழ்க்காணும் குறளில் ஏகதேச உருவக அணி எவ்வாறு பயின்று வருகிறது என்பதை விளக்குக.
"சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
ஏமப் புணையைச் சுடும்"**

**குறளில் பயின்று வரும் அணி**

"சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
ஏமப் புணையைச் சுடும்"
- இக்குறட்பாவில் **ஏகதேச உருவக அணி** பயின்று வந்துள்ளது

**அணி இலக்கணம்**

செய்யுளில் ஒன்றுக்கொன்று தொடர்புடைய பொருள்களை உருவகம் செய்யும் போது, ஒன்றை உருவகம் செய்தும், மற்றொன்றை உருவகம் செய்யாமல் விடுவது ஏகதேச உருவக அணியாகும்.



• ஞானம் • ஜெயம் • மகிழ்ச்சி

Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**சான்று விளக்கம்**

எப்பொருளை யார் யார் சொல்லக் கேட்டாலும், அப்பொருளின் உண்மையான பொருளைக் காண்பதே அறிவாகும்.

**பொருத்தம்**

இக்குறளில் **பொருள்** என்ற பலமுறை பயின்று வந்து ஒரே பொருளைத் தருவதால் இது சொற்பொருள் பின்வரும் நிலையணியாகும்.

**4. சொற்பொருள் பின்வரும் நிலையணியை சான்றுடன் விளக்குக.**

**அணி விளக்கம்**

ஒரு செய்யுளில் வந்த சொல்லே மீண்டும் மீண்டும் வந்து, ஒரே பொருளைத் தந்தால், அது சொற்பொருள் பின்வரும் நிலையணி ஆகும்.

**சான்று**

எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்

**சான்று விளக்கம்**

எண்ணியவர் மனவுறுதியுடையவராக இருந்தால், அவர் எண்ணியவற்றை எண்ணியவாறே அடைவர்.

**பொருத்தம்**

இக்குறளில் **"எண்ணிய"** என்ற சொல் **நினைப்பது** என்ற பொருளில் பல முறை திரும்ப வந்தமையால் இது சொற்பொருள் பின்வரும் நிலையணியாகும்.

**5. உவமையணியை சான்றுடன் விளக்குக.**

**அணிவிளக்கம்**

ஒரு செய்யுளில் உவமை, உவமேயம், உவமஉருபு ஆகிய மூன்றும் வெளிப்படையாக அமைந்திருப்பது உவமை அணி ஆகும்.

ஒரு பொருளோடு வேறொரு பொருளை ஒப்பிட்டுக் கூறுவது உவமையணி எனப்படும்.

**சான்று**

உடம்பாடு இலாதவர் வாழ்க்கை குடங்கருள்
பாம்போடு உடன்உறைந் தற்று.

**சான்று விளக்கம்**

அகத்தில் உடன்பாடு இல்லாவருடன் கூடி வாழும் வாழ்க்கை, ஒரு குடிசையில் பாம்புடன் வாழ்வது போன்றது.

**பொருத்தம்**

| | | |
|---|---|---|
| **உவமை** | - | உடம்பாடு இலாதவர் வாழ்க்கை (உள்ளத்தில் பொருத்தம் இல்லாதவருடன் கூடி வாழும் வாழ்க்கை) |
| **உவமேயம்** | - | குடங்கருள் பாம்போடு உடன் உறைந்தது (குடிசையினுள் பாம்புடன் கூடி வாழும் வாழ்க்கை) |
| **உவமஉருபு** | - | அற்று |

## திணைகள் - புறத்திணை

**இயல் - 2**

**1. வாகைத்திணையைச் சான்றுடன் விளக்குக.**

**திணை விளக்கம்**

போரில் வெற்றி பெற்ற அரசனும் அவனது வீரர்களும் வெற்றியின் சின்னமாக வாகைப்பூவைத் தலையில் சூடிக் கொண்டாடுவது வாகைத் திணையாகும்.

**சான்று**

வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇப்
பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென
- எனத் தொடங்கும் நக்கீரர் பாடிய நெடுநல்வாடை பாடல்.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**திரண்டகருத்து**

- சருகாக உள்ள பாலைவன பூமியை முத்துக்கள் பூத்த கடல்களாக மாற்றுவேன்
- புயலைப் பல கூறுகளாக மாற்றி கோடிக்கான புதிய தென்றலாக மாற்றுவேன்
- இரவில் விண்மீன்களை எல்லாம் காசுகளாக்கி இரவலரோடு பேசுவேன்
- இரவை எரித்துப் பகலாக்கும் சூரியனை ஏழைகள் எரிக்கும் விறகுகளாக மாற்றுவேன்.

**மையக்கருத்து**

- மக்களின் தேவையை நிறைவேற்ற இயற்கையை மாற்றி தருவதாக நா.காமராசன் கூறுகிறார்.

**மோனை**

- செய்யுளில் சீர்தோறும் அடிதோறும் முதல் எழுத்து ஒன்றிவருவது மோனை ஆகும்.

**எ.கா** இரவில் - இரவெரிக்கும்
புயலைக் - புதிய
விண்மீன் - விறகெரிக்க

**எதுகை**

- செய்யுளில் சீர்தோறும் அடிதோறும் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகை ஆகும்.

**எ.கா** இரவில் - இரவெரிக்கும்
பேசுவேன் - வீசுவேன்

**இயைபு**

- செய்யுளில் சீர்தோறும்இறுதி எழுத்து ஒன்றி வருவது இயைபு
- கடைசிஎழுத்து ஒரே மாதிரி வருவது இயைபு ஆகும்.

**எ.கா** பேசுவேன் - வீசுவேன்

**முரண்**

- செய்யுளில் சீர்தோறும் அடிதோறும் சொல்லோ பொருளோ வேறுபடத்தொடுப்பது முரண்
- முரண்படத்தொடுப்பது முரண் (எதிர்ச்சொல்)

**சான்று**

கடல் x பாலை விண்மீன் x பரிதி (சூரியன்)

**சந்த நயம்**

சிந்துப்பா

**சுவை நயம்**

பெருமிதச்சுவை

**அணி நயம்**

உருவக அணி

**முடிவுரை**

இப்பாடலில் மக்களின் தேவைக்காக இயற்கையை மாற்றி அமைத்துத் தம் கவிதையில் புதுமையை எடுத்துக் கூறியுள்ளார்.

## இயல் - 8

வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்
மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்
கானவர்கள் விழியெறிந்து வானவரை யழைப்பார்
கமனசித்தர் வந்துவந்து காயசித்தி விளைப்பார்.
தேனருவித் திரையெழும்பி வானின்வழி யொழுகும்
செங்கதிரோன் பரிக்காலுந் தேர்க்காலும் வழுகும்.
கூனலினம் பிறைமுடித்த வேணியலங் காரர்
குற்றாலத் திரிகூட மலையெங்கள் மலையே.

- திரிகூட ராசப்பக் கவிராயர்

**முன்னுரை**

திரிகூடராசப்பர் திருநெல்வேலி மாவட்டத்தில் தென்காசியை அடுத்துள்ள மேலகரம் என்னும் ஊரில் ஏறக்குறைய 18ஆம் நூற்றாண்டில் பிறந்தவராவார். இவர் திருக்குற்றாலக்குறவஞ்சி, திருக்குற்றாலத்தலபுராணம், திருக்குற்றாலநாதர் உலா போன்ற எண்ணற்ற நூல்களை எழுதியுள்ளார். திருக்குற்றாலக்குறவஞ்சி பாடலில் உள்ள இலக்கிய நயத்தைப் பார்ப்போம்.





Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**திரண்டகருத்து**

- ஆண்குரங்குகள் பலவகையான பழங்களைப் பறித்துப் பெண்குரங்குகளுக்குக் கொடுத்துத் தழுவுகின்றன.
- அவற்றுள் சில பழங்களைப் பெண் குரங்குகள் சிதறுகின்றன.
- அந்தப் பழங்களைத் தேவர்கள் இரந்து கேட்கின்றனர்.
- வேடர்கள் தேவர்களைத் தம்கண்களால் அழைக்கின்றனர்.
- வானத்தில் உள்ள சித்தர்கள் மூலிகைகளை வளர்க்கின்றனர்.
- மலையிலுள்ள அருவியின் அலைகள் எழுந்து வானத்தில் வழிந்து ஓடுகின்றன. இதனால் சூரியனின் குதிரைகளுடைய கால்களும் தேர்ச்சக்கரங்களும் வழுக்கி விழுகின்றன. இத்தகைய சிறப்புகளை உடையது குற்றால மலையாகும்.

**மையக்கருத்து**

- இப்பாடலில் குற்றாலமலையின் சிறப்புகளைத் திரிகூடராசப்பக்கவிராயர் எடுத்துக்கூறுகிறார்.

**மோனை**

- செய்யுளில் சீர்தோறும் அடிதோறும் முதல் எழுத்து ஒன்றிவருவது மோனை ஆகும்.

**எ.கா** <u>ம</u>ந்தியொடு - <u>ம</u>ந்திசிந்து
<u>வா</u>ன்கவிகள் - <u>வா</u>னவரை

**எதுகை**

- செய்யுளில் சீர்தோறும் அடிதோறும் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகை ஆகும்.

**எ.கா** வா<u>ன</u>ரங்கள் - கா<u>ன</u>வர்கள்
கொ<u>ஞ்</u>சும் - கெ<u>ஞ்</u>சும்
தே<u>ன</u>ருவி - கூ<u>ன</u>ிவிளம்

**இயைபு**

- செய்யுளில் சீர்தோறும் இறுதி எழுத்து ஒன்றி வருவது இயைபு
- கடைசிஎழுத்து ஒரே மாதிரி வருவது இயைபு ஆகும்.

**எ.கா** கொஞ்சு<u>ம்</u> - கெஞ்சு<u>ம்</u>
ஒழுகு<u>ம்</u> - வழுகு<u>ம்</u>
அழைப்பா<u>ர்</u> - விளைப்பா<u>ர்</u>

**முரண்**

- செய்யுளில் சீர்தோறும் அடிதோறும் சொல்லோ பொருளோ வேறுபடத்தொடுப்பது முரண்
- முரண்படத்தொடுப்பது முரண் (எதிர்ச்சொல்)

**எ.கா** செங்கதிரோன் x இளம்பிறை

**சந்த நயம்**

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரியர் விருத்தம்

**சுவை நயம்**

பெருமிதச்சுவை

**அணி நயம்**

உயர்வு நவிற்சி அணி

**முடிவுரை**

இப்பாடலில் குற்றால மலையின் எழில் கொஞ்சும் அழகையும் எல்லா நயங்களையும் சிறப்புற எடுத்துக்கூறியுள்ளார்.





Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## இயல் - 4



"வாழ்க்கையில் வளம் பெற
பல்துறை நூல்களைக் கற்போம் !
அறியாமை இருளைப் போக்கிடவே
அனுதினமும் படித்துயர்வோம் !
அட்சய பாத்திரம் இதுவல்லவோ?
அரிது முயன்று அறிவைத் தேடிடுவோம் !
சட்டம் அரசியல் மருத்துவம் போற்றும்
கல்வியால் விளையும் ஞானக்கண்ணாடி!
உலகை ஆளும் தொழில்நுட்பங்கள்
உனக்குள் தருவது நன்னூல்கள்
படித்துப்படித்து முன்னேறு!
பாரதி கண்ட கனவை நனவாக்கிடுவோம் !!"

## இயல் - 5



Padasalai

வணிகம் செய்த மூத்தகுடி!
முத்தும் சந்தனமும் பரிமாற்றத்தின் முதற்படி!
கடல் கடந்து செல்லும் வித்தை
கற்றுத் தந்தது நம் மக்கள்
புகார் நகரத்து வாணிபமெல்லாம்
புவி உரைக்கும் சிலம்பினாலே........
நாளங்காடி அல்லங்காடி கூறும்
நம் மொழியின் வணிக வரலாறாய் !
உப்பும் நெல்லும் கொடுத்து
உறவை வளர்த்தது நம் தமிழ்க்குடி!

## இயல் - 6



கண்ணாடி முன்னே
கற்பனைக் குவியல்கள்!
ஆயிரமாயிர காட்சிகள்
எதிர்கால நினைவுகளை
எட்டிப் பார்க்கும் சட்டகம்!
நாளைய உலகின் தலைவி
நாயகியை உருவாக்கும் அகக்கண்ணாடி!
உண்மையாய் நடப்பவருக்கு
நயமாய் உரைக்கிறது
தலைவி நீயென்று!



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## கவிதை எழுதுதல்

**1. இயற்கை**

அழகு அன்னை அதிசயத்தை
அள்ளித் தருவது இயற்கை!
கொட்டு அருவிதனில் அழகு!
வெட்டும் மின்னல் அழகு!
பொழியும் மாமழை தூறலில்
பொலிவு பெறும் வனமழகு!
மாலை நேரத்து செவ்வானம்
மலை முகடில் பொன்னிறமாய்!
கலை யாவும் மேவும்
பல்கலைக்கழகமாய் இயற்கை!

**2. நாடு**

தாய்மை போற்றும் தரணியில்
தன்னிகரில்லா நம்நாடு
தியாகச் சுடரொளி வீசும்
புண்ணியபூமி இதுவல்லவோ?
இரத்தம் சிந்திய விடுதலை
உத்தமர்கள் வாழும் நிலம்
உனக்கும் பிறந்திட வேண்டுமே!
நித்தமும் நாட்டின் பற்றை
உனக்குள் விதைத்திட வேண்டுமே
போற்றுவோம் திருநாட்டை எண்ணி...

**3. கடல்**

நீரால் சூழப்பட்ட உலகும்
பாரால் அரண் காக்கும்
பாவலர் போற்றும் விரிகடல் !
அலை வீசும் அழகுக்கோவில்!
முத்துக்கள் கொஞ்சும் சிப்பிகள்!
கத்தும் ஓசையில் காலைக்கதிரவனை
கவிபாட அழைக்கின்றது தமிழ்!
நீலஆடை உடுத்தி நித்தமும்
நீலாம்பரி ராகம் பாடுகிறதே!
கரையைத் தொடும் அழகே அழகு!

**4. மழை**

வான்மகள் பூமிக்கு தந்த சீதனம்!
சிரித்து சிரித்து தூவுகிறது நேசமழை!
காடுகள் கரம் குவித்து பேசுகின்றன
நன்றியுணர்வாய் பசுமைக்காட்சி
தூறல் மழையால் நெய்த ஆடை
பூமிக்கு பச்சைப்பட்டு சேலை
மேகங்கள் பொழிந்த அன்பால்
பூக்கள் சிரிக்கின்றன புதுமையாய்
மழையால் மகத்துவம் பெற
மலர்ச்சி கொண்டதே மானுடம்!

**5. கல்வி**

எங்கும் ஓங்கிய தமிழன் பெருமை
வாணிகம் நடத்த வழித்துணையாய்
நானிலம் செழிக்க நாற்புறமும் தாயே
நெய்தல் நிலத்தின் தெய்வமும் நீயே!
அறியாமை இருளைப் போக்கும்
அற்புத அணையா விளக்கு!
சங்கத்தில் நடனம் புரியும் மங்கை!
அள்ளஅள்ள குறையாத களஞ்சியம்!
மேன்மையுற கல்விக் கற்று
மேதையர்கள் நடுவே உலவும்
சான்றோர்கள் ஆளும் உலகை
சரித்திரம் படைக்கும் கருவி கல்வியே!

**6. மரம்**

அ) ஆக்ஸிஜன் காற்றை
அள்ளித் தரும் அட்சயபாத்திரம்!
நிழலை விரித்து
நீண்ட ஓய்வைத் தரும்!
பச்சை நிறத்துக்கம்பளம்!
பூமியின் சமஸ்தானம்!
வாங்கி வந்த வரத்திலே
முதன்மையானது மரம்!
காத்திடுவோம் பச்சைமனிதனை
தலைமுறை விளங்க ..................

ஆ) இனிமையாய் காக்கும் உலக உயிர்களை!
இறைவன் அருளிய பச்சைக்குடை!
இதமான நிழல் கொடுக்கும் !
இனியென கனி வழங்கும்
பல வளங்களைத் தன்னலமின்றி
நிலமகளைக் காக்கும் தாய் !
மரம் படைப்புகளின் வரம் !
வான்மழை வரவை எதிர்கொள்ள
மரம் நடுவோம் மனிதம் காக்க.

**7. கடல்**

அ) நீலக்கடலில் நித்தமும்
புதிய காட்சிகள்
அலைகள் சொல்லிக்கொடுக்கின்றன!
இன்பமும் துன்பமும்
மாறிமாறி வருவதால்
துவளாதே!
கடந்து செல்! காலம்
திரவியத்தை அள்ளித்தரும்
விரிந்த அறிவுக்கடலின்
ஆழ்ந்த அனுபவ உரை!





Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**5. சோமசுந்தர பாரதியார் எந்த பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றியுள்ளார்?**

➢ அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

**6. சோமசுந்தர பாரதியார் தொல்காப்பியத்தில் எந்த இயலுக்கு உரையெழுதியுள்ளார்?**

➢ தொல்காப்பியப் பொருளதிகார அகத்திணையியல், புறத்திணையியல், மெய்ப்பாட்டியல் ஆகியவற்றுக்கு உரை எழுதியுள்ளார்.

## இயல் - 6
### சான்றோர் சித்திரம்

ஐந்தரை வயதில் திருமணம் செய்து கொடுக்கப்பட்ட பெண் ஒருவர், தன் குடும்பத்தாரிடமே கல்வி கற்றார். கதை கூறுவதில் ஆர்வம் கொண்டிருந்த அவர் தன் கற்பனை ஆற்றலால் தோழியர்களுக்கும் புதிய கதைகளை உருவாக்கிக் கூறினார். அதைக் கண்ட அவரது கணவர் அப்பெண்ணின் படைப்பாற்றலை ஊக்குவிக்கப் பல நாடகங்களுக்கு அழைத்துச் சென்றார். அப்பெண்ணுக்கு நாடகம் எழுத வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது. ஆனால் ஓரளவு மட்டும் எழுதத் தெரிந்த தன்னால் நாடகம் எப்படி எழுத முடியும் என்று அவர் வருந்தியபோது, அவரது தோழி, நாடகத்தை அவர் சொல்லச் சொல்லத் தான் எழுதுவதாகக் கூறி ஊக்கப்படுத்தினார். இப்படித்தான் அப்பெண் தன்னுடைய முதல் நூலான "இந்திர மோகனா" என்ற நாடக நூலை வெளியிட்டார். அவர்தான் "நாவல் ராணி", "கதா மோகினி", "ஏக அரசி" என்றெல்லாம் தம் சமகால எழுத்தாளர்களால் அழைக்கப்பட்ட வை.மு.கோ (வைத்தமாநிதி முடுக்கை கோதைநாயகி அம்மாள்) ஆவார்.

இவர் "ஜகன் மோகினி" என்ற இதழை முப்பத்தைந்து ஆண்டுகள் தொடர்ந்து நடத்தினார். பெண் எழுத்தாளர்களையும், வாசகர் வட்டத்தையும் உருவாக்கினார். காந்தியத்தின் மீது பற்றும் உறுதியும் கொண்டிருந்த இவர் தம் எழுத்துகளால் மட்டுமன்றி மேடைப்பேச்சின் மூலமும் காந்தியக் கொள்கைகளைப் பரப்புரை செய்ததோடு விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்றுச் சிறைக்கும் சென்றார். தமிழகப் பெண் வரலாற்றில் தனித்து அடையாளம் காட்டப்பட வேண்டிய சிறப்புக்குரியவரான வை.மு.கோ. அவர்கள் 115 நாவல்கள் எழுதியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. "குடும்பமே உலகம்" என்று பெண்கள் வாழ்ந்த காலகட்டத்தில், வீட்டிற்கு வெளியே உலகம் உண்டு என்பதைப் பெண்களுக்குத் தன் வாழ்வின்மூலம் இனம் காட்டிய பெருமைக்கு உரியவர் வை.மு.கோ. அம்மையார்.
அவருடைய எழுத்தாற்றலுக்கொரு சான்று.

"என்ன வேடிக்கை! அடிக்கடி பாட்டி உலகானுபவம்... உலகம் பலவிதம் ..... என்றெல்லாம் சொன்னதைக் கேட்டபோது எனக்கு ஒன்றுமே புரியாது விழித்தேனே... பாட்டி சொல்லிய வசனங்களைவிடக் கடிதங்கள் பலவற்றைப் படித்தால் அதுவே மகத்தான லோகானுபவங்களை உண்டாக்கிவிடும் போலிருக்கிறதே! பாவம்! பேசுவது போலவே தன்னுடைய மனத்தினுள்ளதைக் கொட்டி அளந்துவிட்டாள்.... நான் கிராமத்தை வெறுத்துச் சண்டையிட்டு வீணாக அவர் மனதை நோவடிக்கிறேன். இவள் பட்டணத்தை வெறுத்துத் தன் கொச்சை பாஷையில் அதன் உண்மை ஸ்வரூபத்தை படம் பிடித்துக் காட்டி விட்டாளே!.... என்ன உலக விசித்திரம் !..... என்று கட்டுமீறிய வியப்பில் சித்ரா மூழ்கினாள்". ("தபால் வினோதம்" குறுநாவலில் இருந்து)

**மாதிரி வினாக்கள்**

**1. வை.மு.கோதை நாயகி எவ்வாறு அழைக்கப்படுகிறார்?**

➢ நாவல் ராணி, கதாமோகினி, ஏகஅரசி

**2. வை.மு.கோ என்பதன் விரிவாக்கத்தை எழுதுக?**

➢ வைத்தமாநிதி முடும்பை கோதைநாயகி அம்மாள்

**3. வை.மு.கோதை நாயகி எழுதிய முதல் நாடகநூலின் பெயரை எழுதுக?**

➢ இந்திர மோகனா

**4. வை.மு.கோதை நாயகி நடத்திய இதழ் பெயர் என்ன?**

➢ ஜகன்மோகினி

**5. வை.மு.கோதை நாயகி எத்தனை நாவல்களை எழுதியுள்ளார்.**

➢ 115 நாவல்கள்

**6. தபால் வினோதம் என்ற குறுநாவலின் ஆசிரியர் யார்?**

➢ வை.மு.கோதை நாயகி



• ஞானம் • ஜெயம் • மகிழ்ச்சி

Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## கூடுதல் வினா

1. **இரட்சணிய யாத்திரிகத்தில் இறைமகனாரை ஆளுநர் முன் நிறுத்திய விதத்தையும், துன்புறுத்தியதையும் எழுதுக?**

**இறைமகனாரை ஆளுநர் முன் நிறுத்துதல்**

- இறைமகனைக் கொல்ல வேண்டும் என்ற எண்ணம் கொண்டு போந்தியு பிலாத்து என்னும் ஆளுநரின் முன் தனியாகக் கொண்டு போய் நிறுத்தினர். அவருக்குத் தண்டனை பெற்றுத்தரவும் உறுதியாக இருந்தனர்.
- வற்றிய சிறிய கிணறு தனக்குள் கடலை அடக்கிக் கொள்ள முடியுமா? முடியாது.

**இறைமகனாரைத் துன்புறுத்திய விதம்**

- இறைமகனை இழுத்துச் சென்ற அக்கொடியவர்கள் அவர் அணிந்திருந்த வெள்ளாடையைக் கழற்றிவிட்டு, முருக்க மலர் போன்று சிவந்த ஓர் அங்கியை அவருக்குப் போர்த்தினர்.
- துன்பம் தரும் கூர்மையான முள்செடியினால் பின்னப்பட்ட ஒரு முடியை அவருடைய தலையில் வைத்து இரத்தம் பீறிட்டு ஒழுகுமளவு அழுத்தினர்.
- கொடுமனம் படைத்த அந்த முரடர்கள், இறைமகனுடைய கையிலிருந்த கோலினைப்பிடுங்கி எடுத்துக் கொண்டனர்.
- முள்முடி சூட்டப்பட்ட அவர் தலையின்மேல் வன்மையாக அடித்து வேதனை செய்தனர். மேலும், அவருடைய திருமுகத்தில் எச்சிலை உமிழ்ந்து, திட்டிப் பழித்துக் கேலி செய்தனர்.

# சிறுபாணாற்றுப்படை

## கூடுதல் வினா

1. **சிறுபாணாற்றுப்படை கூறும் கடையெழு வள்ளல்களுள் இருவரின் கொடை குறித்து விவரிக்க?**

**பேகனின் ஈகைப்பண்பு**

- பருவம் பொய்க்காமல் மழை பெய்யும் வளமலையில் வாழும் மயிலுக்குப் பேகன் (அது குளிரால் நடுங்கும் என்று எண்ணித் தன் மனத்தில் சுரந்த அருளினால்) தன்னுடைய ஆடையைக் கொடுத்தான்.
- வலிமை வாய்ந்த ஆவியர் குலத்தில் தோன்றியவன்.
- பெரிய மலை நாட்டுக்கு உரியவன்.
- வலிமையும் பெருந்தன்மையும் நற்பண்பும் கொண்டவன்.
- பொதினி மலைக்குத் தலைவன்.

**அதியமானின் ஈகைப்பண்பு**

- நறுமணம் கமழும் பெரிய மலைச்சாரலில் இருந்த அழகுமிக்க நெல்லி மரத்தின் கனி, உயிர்நிலை பெற்று வாழ உதவும் அமுதத்தின் தன்மையுடையது.
- அத்தகைய நெல்லிக்கனி, தனக்குக் கிடைக்கப்பெற்ற போது அதனை (தான் உண்ணாமல்) ஔவைக்கு வழங்கியவன் அதியமான் (அதிகன்) என்னும் வள்ளல்.
- வலிமையும் சினமும் ஒளியும் மிக்க வேலினை உடையவன்.
- கடல் போன்று ஒலிக்கும் படையினையும் உடையவன்.

2. **கடையெழு வள்ளல்களும், அவர்கள் ஆண்ட நாடுகளும் பற்றித் தொகுத்து எழுதுக?**

- **பேகனின் ஊரான** ஆவினன்குடி “பொதினி” என்றழைக்கப்பட்டு, தற்போது பழனி எனப்படுகிறது. பழனி மலையும் அதைச் சுற்றிய மலைப்பகுதிகளும் பேகனது நாடாகும்.
- **பாரியின் நாடு** பறம்பு மலையும், அதைச்சூழ்ந்திருந்த முந்நூறு ஊர்களும் ஆகும். பறம்பு மலையே பிறம்பு மலையாகி, தற்போது பிரான்மலை எனப்படுகிறது. இம்மலை சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டத்தில் சிங்கம்புணரிக்கு அருகில் உள்ளது.
- **காரியின் நாடு** (மலையமான் திருமுடிக்காரி) மலையமான் நாடு என்பதாகும். இது மருவி “மலாடு” எனப்பட்டது. இது விழுப்புரம் மாவட்டம் தென்பெண்ணை ஆற்றங்கரையில் அமைந்துள்ள திருக்கோவிலூரும் (திருக்கோயிலூர்) அதைச் சூழ்ந்துள்ள பகுதிகளுமாகும்.
- **ஆய்நாடு** (ஆய் அண்டிரன்) - பொதிய மலை எனப்படும் மலை நாட்டுப் பகுதியாகும். தற்போது அகத்தியர் மலை என்றும் அழைக்கப்படுகிறது. இது திருநெல்வேலி மாவட்டத்தில் அமைந்துள்ள குற்றாலம், பாபநாசம் ஆகிய மலைப்பகுதிகளும் அதைச்சூழ்ந்துள்ள பகுதிகளுமாகும்.



• ஞானம் • ஜெயம் • மகிழ்ச்சி

Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



- **அதியமான் நாடு** (அதிகமான் நெடுமான் அஞ்சி) "தகடூர்" என்றழைக்கப்பட்ட தருமபுரியைத் தலைநகராகக் கொண்டு விளங்கிய பகுதி. இப்பகுதியில் உள்ள "பூரிக்கல்" மலைப்பகுதியில் இருந்து பறித்து வந்த நெல்லிக்கனியையே ஔவையாருக்கு அதியமான் கொடுத்ததாகக் கூறப்படுகிறது.
- **நள்ளியின் நாடு** (நளிமலை நாடன்) நெடுங்கோடு மலை முகடு என்றழைக்கப்பட்ட பகுதி. தற்போது உதகமண்டலம் "ஊட்டி" என்று கூறப்படுகிறது
- **ஓரியின் நாடு** (வல்வில் ஓரி) - நாமக்கல் மாவட்டத்தில் உள்ள "கொல்லிமலையும" அதைச்சூழ்ந்துள்ள பல ஊர்களும் ஆகும்.

## உரைநடை - நெடுவினா

**இயல் - 1**
**புத்தக வினா**

## தமிழ்மொழியின் நடை அழகியல்

**1. கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளை எடுத்துக்காட்டி விளக்குக.**

**குறிப்புச்சட்டகம்**

- முன்னுரை
- நடையியல்
- ஒலிக்கோலங்கள்
- சொற்புலம்
- சொல்வளம்
- தொடரியல் போக்குகள்
- முடிவுரை

**முன்னுரை**

பாட்டு (அ) கவிதை நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளில் ஒலிக்கோலங்கள், சொற்களின் புலம், சொல்வளம், தொடரியல் போக்குகள் மிக முக்கியமானதாகும்.

**நடையியல்**

- மொழிக்குள் இருக்கும் ஒரு வலிமைமிக்க ஆற்றல் கவிதைக்காக, இலக்கியத்துக்காகத் தன்னை வெளிப்படுத்துகிறது. கவிதையின் உந்துசக்தியாக விளங்குகிறது.
- கவிதையின் இயங்காற்றல்தான் நடையாகும். தொல்காப்பியமும் பிற இலக்கணநூல்களும் அவ்வாறே கருதுகின்றன.

**ஒலிக்கோலங்கள்**

- எந்தத் தொன்மையான மொழியும் சமிக்ஞை மற்றும் இசை ஆகியவற்றிலிருந்து துவங்குகிறது.
- மொழி சார்ந்த கவிதையும் இசையோடும் இசைக்கருவியோடும் தான் பிறக்கிறது. ஓசையும் பொருளும் இணைந்து கலைவடிவம் பெறுகிறது. இதனை ஒலிப்பின்னல் (Sound Texture) என்கிறோம்.

**எ.கா.**

"கடந்தடு தானை மூவிருங்கூடி
உடன்றனிர் ஆயினும் பறம்பு கொளற்கரிதே;
முந்நூறு ஊர்த்தே தண்பறம்பு நன்னாடு;
முந்நூறு ஊரும் பரிசிலர் பெற்றனர்;
யாமும் பாரியும் உளமே;
குன்றும் உண்டுநீர் பாடினீர் செலினே" (புறம் 110)

என்னும் பாடலின் வன்மை உணர்ச்சியைக் காட்டும் விதமான க,ச,ட,ற முதலின மெய்கள், பிற மெல்லின, இடையின மெய்களைக் காட்டிலும் அதிகம் வருதலைக் காட்டுகிறது.

- சிறுசிறு வாக்கியங்கள், பேசுவோரின் குறிப்பிட்டு பேசும் தன்மையைக் காட்டுகின்றன.

படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசைக்
கடாஅ யானைக் கலிமான் பேக (புறம் 145)
புணரின் புணராது பொருளே; பொருள்வயின்
பிரியின் புணராது புணர்வே (நற் 16)
நுந்தை தந்தைக்கு இவன்தந்தை தந்தை (புறம் 290)

- நெடில் ஒலிகளின் வருகையும், சில ஒலிகளும் சில சொற்களும் திரும்பவரும் தன்மை பெற்றிருப்பதும் இவற்றோடு இணைந்து நிகழ்த்தப்பெறும் சொல் விளையாட்டுகளும் இங்கே கவனத்திற்குரியன.





Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**அணுகுண்டைவிடப் பேராபத்து**

ஒரு முறை பயன்படுத்தித் தூக்கி எறியும் நெகிழிப்பைகள் அணுகுண்டைவிடப் பேராபத்து என உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

**நெகிழி தவிர்ப்பதால் விளையும் நன்மைகள்**

நெகிழி பயன்படுத்தாமல் இருப்பதால் வேளாண்மை நிலம், நீர்நிலைகள், கால்நடைகள், வனவிலங்குகள், பறவைகள், சுற்றுச்சூழல் மேம்பாடு, தட்பவெப்பநிலை சமன்பாடு, நோய்கள் பரவாமை ஆகியவைப் பாதுகாக்கப்படும். மேலும் தூய்மை, பாதுகாப்பு, பசுமை முதலானவை மேம்படுத்தும்.

**முடிவுரை:**

பயன்படுத்தப்படும் நெகிழியால் தீங்கு ஏற்படாமலிருக்க உறுதிகொள்வோம். துணிப்பைகளைப் பயன்படுத்துவோம். அடுத்த தலைமுறைகள் சிறந்து வாழ சுற்றுச்சூழலை வளர்க்க அரசு நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. நாம் ஒவ்வொருவரும் நெகிழி பயன்பாடு தவிர்ப்பதின் மூலம் இயற்கை அன்னையைக் காப்போம். நெகிழி தவிர்த்து, நிளத்தைக் காப்போம்.

2. **புவி வெப்பமாயதலைக் கட்டுப்படுத்த உலக நாடுகள் எத்தகைய நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன?**

**புவி வெப்பமயமாதல்**

இயற்கையானது சமநிலையோடு இருந்தால்தான் அந்தந்தப் பருவநிலைக்கேற்ப நிகழ்வுகள் நடக்கும். மாறாக அது சமநிலையை இழக்கும்போது இயல்பான பருவநிலையில் மாற்றம் ஏற்படுகிறது. இதனைப் புவி வெப்பமயமாதல் என்று அழைப்பர். இதன் காரணமாகப் புயல், பெருமழை, பெருவெள்ளம், புவி வெப்பமாதல் உள்ளிட்ட மாறுபட்ட நிகழ்வுகள் நடைபெறுகின்றன.

**புவி வெப்பமயமாதல் ஏற்படக் காரணங்கள்**

மனிதன் பேராசையால் இயற்கை வளங்களைக் கடுமையாகச் சேதப்படுத்தியதன் விளைவாகப் பூமி பல மாறான நிகழ்வுகளைச் சந்திக்கின்றது. புவி வெப்பமடைதல் "மனிதன் உருவாக்கிக் கொண்ட சிக்கலே" என்று இங்கிலாந்து நாட்டு அறிஞர் டேவிட் கிங் கூறுகிறார்.

**பசுமைக்குடில் வாயுக்கள்**

கார்பன்-டை-ஆக்சைடு, மீத்தேன், நைட்ரஸ் ஆக்சைடு, ஓசோன், நீராவி போன்றவற்றைப் பசுமைக்குடில் வாயுக்கள் என்கிறார்கள். இதன் அளவு அதிகமாகி புவி வெப்பமடையத் தொடங்குகிறது. காலநிலை மாற்றம் ஏற்பட்டுப் புவியின் இயக்கம் குறைந்து கொண்டே வருகிறது. பூமியில் இயற்கைச் சமநிலை மாறி பல்வேறு பேரிடர்களை உருவாக்குகிறது.

**உலகநாடுகள் நடவடிக்கை**

சூரிய ஆற்றல், காற்று ஆற்றல், ஹைட்ரஜன் ஆற்றல், தாவர ஆற்றல் போன்ற கார்பன் அற்ற ஆற்றல் பயன்பாட்டை நோக்கி உலக நாடுகள் சென்றால் மட்டுமே நிலைமையைக் கட்டுப்படுத்த முடியும். ஐக்கியநாடுகள் 1992 - ஆம் ஆண்டு ரியோ டி ஜெனிரோவில் காலநிலை மாற்றம் பற்றிய பணித்திட்டப் பேரவையை UNFCC – (United Nations Framework convention on climate changes) உருவாக்கியது. ஒவ்வொரு ஆண்டும் பசுமைக்குடில் வாயுக்களைக் கட்டுப்படுத்துவது குறித்து உரையாடல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்பொழுது 193 நாடுகள் உறுப்பினர்களாக இருக்கின்றன. புவி வெப்பமயமாதலைத் தடுக்க தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

## தமிழர் குடும்ப முறை

## இயல் - 3

### புத்தக வினா

1. **குடும்பம் என்னும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் என்னும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது - எவ்வாறு? விளக்குக.**

**குறிப்புச்சட்டகம்**

- குடும்பம் - விளக்கம்
- மணந்தகம்
- தாய்வழிக் குடும்பம்
- தந்தை வழிக்குடும்பம்
- தனிக்குடும்பம்
- விரிந்த குடும்பம்
- முடிவுரை



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**போக்குவரத்து**

- 1856 இல் தென்னிந்தியாவின் முதல் தொடர் வண்டி நிலையம் இராயபுரத்தில் அமைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து மத்திய தொடர் வண்டிநிலையம் எழும்பூர் தொடர்வண்டிநிலையம் போன்றவை உருவாக்கப்பட்டன.
- அண்ணாசாலைக்கு அடுத்ததாக முக்கியமான சாலை பூவிருந்தவல்லி நெடுஞ்சாலை ஆகும்.
- 19ஆம் நூற்றாண்டில் உருவான சென்னை துறைமுகம், பன்னாட்டு விமான நிலையமும் குறிப்பிடத்தக்கன.

**நம்பிக்கை நகரம்**

- இன்று சென்னை வெறும் நகரம் மட்டுமல்ல, அது நம்பிக்கை மையம். சென்னையை மையமிட்டு உருவான தொழிற்சாலைகளும் நிறுவனங்களும் ஏற்படுத்திய நேரடி, மறைமுக வேலை வாய்ப்புகள் நகரின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றுகின்றன. இன்று கணினி மென்பொருள், வன்பொருள், வாகன உற்பத்தி ஆகியவற்றில் சென்னை பெரும்பங்காற்றுகிறது.
- இந்திய அளவில் மென்பொருள் ஏற்றுமதியில் முன்னிலை வகிக்கும் சென்னை, மின்னணுப் பொருள்களை உருவாக்கும் மையமாகவும் திகழ்கிறது.

**முடிவுரை**

ஒவ்வொரு நகரத்துக்கும் வரலாறும் வடிவழகும் உண்டு. அது சிதைத்து விடாமல் வளர்ச்சி அமைவதே முறையானது. அதிலும் சென்னை போன்ற ஒரு மாநகருக்கென்று இருக்கின்ற தனித்துவமான அமைப்பையும் வரலாற்றுத் தடயங்களையும் அழியாமல் பாதுகாக்கும் செயல்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.

## கூடுதல் வினா

**1. உலகப்புகழ் பெற்ற சென்னை அறிவின் நகரம், பண்பாட்டின் அடையாளம், நம்பிக்கை நகரம் என்பதை விளக்குக?**

**சென்னை அறிவின் நகரம்**

- 1715 இல் உருவான 'புனித மேரி தேவாலய தர்மப்பள்ளி' ஆசியாவில் உருவான முதல் ஐரோப்பியக்கல்வி முறையிலான பள்ளியாகும்.
- 1812 இல் உருவான சென்னைக் கோட்டைக்கல்லூரி, 1837 இல் தொடங்கப்பட்ட கிறித்துவக்கல்லூரி, 1840 இல் உருவான பிரசிடென்சி பள்ளி (பின்னாளில் மாநிலக்கல்லூரி) போன்ற பல்வேறு கல்வி நிறுவனங்கள் சென்னையின் கல்வி வளர்ச்சிக்குப் பெரும்பங்காற்றின.
- 19ஆம் நூற்றாண்டின் அறிவுப்புரட்சியில் பெரும்பங்காற்றிய சென்னைப்பல்கலைக்கழகம் 1857 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.
- 1914இல் பெண்களுக்கெனத் தொடங்கப்பட்ட இராணிமேரி கல்லூரி பெண்கல்வி வரலாற்றில் குறிப்பிடத்தக்க கல்வி நிறுவனம் ஆகும்.

**பண்பாட்டு அடையாளங்கள்**

- தென்னிந்திய வரலாற்றை அறிவதற்கும் பண்பாட்டைப் புரிந்து கொள்வதற்கும் பேருதவி புரியும் எழும்பூர் அருங்காட்சியகமும் கோட்டை அருங்காட்சியகமும் சென்னையின் அடையாளத்தைப் பேணுபவையாகும்.
- இந்தியாவின் முதல் பொது நூலகமான கன்னிமாரா நூலகம் நவீனமாக வளர்ந்து வரும் பெரிய நூலகமாகும்.
- இந்திய சாரசனிக் கட்டடக்கலை பாணியில் கட்டப்பட்ட தமிழ்நாடு ஆவணக்காப்பகம், மத்தியத் தொடர்வண்டி நிலையம், தென்னகத் தொடர்வண்டித் தலைமையகம், எழும்பூர் தொடர்வண்டி நிலையம், பொது அஞ்சல் அலுவலகம், உயர்நீதி மன்றம், சென்னைப் பல்கலைக்கழகம், ரிப்பன் கட்டடம், விக்டோரியா அரங்குகள் போன்ற கட்டடங்கள் இன்றும் சென்னையின் பழமையைப் பறைசாற்றுபவை ஆகும்.

**நம்பிக்கை நகரம்**

- இன்று சென்னை வெறும் நகரம் மட்டுமல்ல, அது நம்பிக்கை மையம். சென்னையை மையமிட்டு உருவான தொழிற்சாலைகளும் நிறுவனங்களும் ஏற்படுத்திய நேரடி, மறைமுக வேலை வாய்ப்புகள் நகரின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றுகின்றன. இன்று கணினி மென்பொருள், வன்பொருள், வாகன உற்பத்தி ஆகியவற்றில் சென்னை பெரும்பங்காற்றுகிறது.
- இந்திய அளவில் மென்பொருள் ஏற்றுமதியில் முன்னிலை வகிக்கும் சென்னை, மின்னணுப் பொருள்களை உருவாக்கும் மையமாகவும் திகழ்கிறது.





Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

## இயல் - 2

## புத்தக வினா

## முதல்கல் - உத்தமசோழன்

1. **பொறுப்புணர்ச்சியின்றி இருந்த ஊரைத் தன் பொறுப்புணர்வால் மாற்றிய மருதனின் பண்புநலத்தை விவரிக்க?**

**முதல்கல் - உத்தமசோழன்**

**முன்னுரை**

நெற்பயிர்களை வாழ வைக்கும் மழைநீர், சில நேரங்களில் வெள்ளப்பெருக்கத்தால் பயிர்களை இல்லாமல் ஆக்கி விடுகிறது. அது வான்மழை நீரின் குற்றமாகாது. வெள்ளத்தைத் தேங்க விடாமல் வழிவகை செய்யாத மனிதனின் குற்றமேயாகும். பெரும் வெள்ளத்தை வடிகால் செய்து பயிர்களையும் ஊரையும் ஒரு தனிமனிதனாக நின்று காப்பாற்றிய பெருமை மருதன் என்னும் கதாபாத்திரத்துக்கு உண்டு என்பதை இச்சிறுகதை எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

**கதை மாந்தர்கள்**

மருதன், அல்லி, மாரி, காளியப்பன், நாகூர் பிச்சை என்கின்ற பிரேம்குமார்

**மருதனின் தன்னார்வம்**

வளவனாற்றின் வடக்கே நின்று பார்த்த மருதனுக்குத் திக்கென்றது. கண்ணுக்கெட்டிய தூரம் வரை "பச்சை பசேல்" என்று விரிந்து கிடந்த வயலில் வெள்ளம் சூழ்ந்து இளம்பயிர்கள் மூழ்கியிருந்தது. எந்நேரத்திலும் ஆபத்தான சூழ்நிலையை அடையும் என எண்ணி கவலை அடைந்தான். அழுகிப் போனால் சாகுபடி செய்ய முடியாது. மறுபடியும் புதிதாக நடவு நட்டு செய்ய யாரால் முடியும் என்று மருதன் வேதனை அடைந்தான்.

**வெள்ளநீர்க்காடு**

வெள்ளப்பெருக்கால் மூன்று மைல் நீளம் வடிவாய்க்கால் முழுவதும் சுவர் வைத்துத் தடுத்ததைப்போல நெய்வேலி காட்டாமணக்குச் செடிகள் ஆக்கிரமிப்பு செய்திருந்தன. காட்டாமணக்குச் செடிகளைப் பிடுங்கி எறிந்தாலே போதும், உபரிநீர் ஒரே நாளில் வடிந்துவிடும். பயிர்களும் கிராம மக்களும் தப்பிக்கலாம் என மருதன் நினைத்தான்.

**மருதன் கூறிய யோசனை**

கிராம மக்களில் மாரி, மிராசு காளியப்பன், கிராமத்தின் முதல் பட்டதாரி பிரேம்குமார் ஆகியோரிடம் யோசனை ஒன்றைக் கூறினான் மருதன். ஊர்க்காரங்க எல்லோரும் ஒன்றுசேர்ந்து ஆளுக்கொரு காட்டாமணக்குச்செடி, களைகள் ஆகியவற்றைப் பிடுங்கினாலே போதும். வெள்ளநீர் கடகடவென வழிந்தோடி விடும். பயிர்களும் காப்பாற்றப்படும் என்று யோசனை கூறினான்.

**ஊர்க்காரர்கள் கூற்றுகள்**

நீ போகாத ஊருக்கு வழி கேக்கிற என மாரியும், காளிப்பனோ நாம முன்னின்று செய்யறப்ப ஆயிரம் இரண்டாயிரம் செலவாகிடும் என நெனச்சு, மகளின் ஊருக்குப் போவதாகவும், பட்டதாரி பிரேம்குமார் பி.டபிள்யூ.டி கிட்ட பெட்டிசன் கொடுங்க. அவங்க பார்த்துக்குவாங்க எனவும் கூறினார்கள். அனைவரின் பேச்சையும் கேட்டு மருதன் வருத்தம் அடைந்தான்.

**அல்லியின் கோபம்**

மனம் உடைந்து போன மருதன் வீடு திரும்பியதைக் கண்டு அல்லி அதிர்ச்சி அடைந்தாள். நடந்ததைக் கூறி வருத்தமுற்றான் மருதன். இந்த ஊரு எப்படி போனா நமக்கென்ன? "இந்த ஊரு இல்லேனா இன்னோர் ஊரு. வேலையைப் பாருங்க" என்று அல்லி ஆவேசமாகக் கத்தினாள்.

**மருதனின் முயற்சி**

இரவு முழுவதும் தூங்க முடியாமல் பயிர்களைப் பற்றியே நினைத்திருந்தான் மருதன். "என்னைக் காப்பாற்று", "என்னைக் காப்பாற்று" என மருதனைப் பார்த்து பயிர்கள் கெஞ்சுவதைப் போலிருந்தது. மருதன் காலையில் வாய்க்காலில் மண்டிக் கிடந்த காட்டாமணக்குச் செடிகளை அறுத்து மேலே எறிந்து கொண்டிருந்தான். கணவனைத் தேடி வயலுக்கு அல்லி ஓடி வந்தாள். "நீங்க சொல்றது உண்மைதான் மாமா" என்றாள். நம்மால் முடிந்ததைச் செய்வோம் என அறுத்தெறிந்த செடிகளை அள்ளிக் கரையில் தூக்கிப் போட்டாள்.

**ஊராரின் தொடர் முயற்சி**

மருதனையும் அல்லியையும் கண்ட மாரிமுத்தும் காளியப்பனும் களம் இறங்கினார்கள். இந்தச் செய்தி ஊருக்குள் பரவியது. ஒவ்வொருவரும் தனக்கு முடிந்த உதவியைச் செய்ய தொடங்கினர். முதல் முயற்சியே வெற்றிக்குக் காரணமாக தொடர் முயற்சியாக அமைந்திருந்தது.

www.Padasalai.Net www.CBSEtips.in



**2. "தலைக்குளம்" என்னும் சிறுகதை மூலமாகக் கிராமங்கள் தங்கள் முகவரியை இழந்து வருவதை விளக்குக?**

**முன்னுரை**

மக்கட்தொகைப் பெருக்கம், நாகரிக வளர்ச்சி, நகரமயமாதல், புலம்பெயர்வு, இளைய தலைமுறையினரின் மனப்பான்மை ஆகியவற்றின் விளைவாகக் கிராமங்கள், தங்கள் முகவரியை இழந்து வருகின்றன. கிராமங்கள் மக்கள் மகிழ்ச்சியான வாழ்க்கை வாழ்வதற்கு ஏற்ற இடமாக இருந்து பின்னர், நகராமாக மாறியதைப்பற்றி இச்சிறுகதை பேசுகின்றது.

**தலைக்குளம்**

தலைக்குளத்தில் ஒரு முங்கு முங்கினாலே உடம்பெல்லாம் குளிர்ச்சியால் சிலிர்த்துப்போகும். நாடிநரம்புகள் கலந்து தெறித்துவிடும் போல் இருக்கும். அவ்வளவு குளிர்ச்சி!

தலைக்குளத்தின் தென்கரையில் பெண்கள் குளிப்பதற்கான கடவும் துணி துவைச்சு அடிக்கப் பரந்த கற்களும் இருக்கும். எந்நேரமும் துணிதுவைத்துக் கல்லின் அடிக்கும் சத்தமும் எழுந்து கொண்டிருக்கும்.

**கன்னியர் கோணம் ஏலா வயல்**

- நாலு எருமை மாடுகளை ஒரே கயிற்றில் கட்டிச்சுற்றி விட்டு மிதித்துச்சூடு அடிப்பார்கள். எருமைமாடுகள் சுற்றி வருவது பார்க்க ரசனையாக இருக்கும். சூடு அடித்து முடிந்த ஈர வைக்கோலைக் கயிற்றில் கட்டி இழுத்து வந்து பாவாத்து மணலில் காயப்போடுவதற்காகத் தூற்றும்போது, களத்தில் பச்சை நெல் மணம் கமழும்.
- தலைக்குளத்திலிருந்தும் கன்னியார் கோணம் ஏலாவிலிருந்தும் ஈரம் நக்கி எடுத்துவரும் காற்று சுகமாகவே இருக்கும். அந்தக் காற்றுக்காகத்தான் இப்போது இந்த கான்கிரீட் சுள்ளைக்குள்ளிலிருந்து ஏங்குவது. ஃபேன் இருந்தென்ன, ஏ.சி. இருந்தென்ன! ஊரைவிட்டு வயிற்றுப்பிழைப்பிற்காக இந்த நகரத்தில் வந்து கூடும் கட்டி வருடங்கள் முப்பது கடந்தன.

**தலைக்குளத்திலிருந்து வீடு சற்றுத் தொலைவில் வீட்டுக்கிணறு**

- வேனில் காலங்களில் வீட்டுக் கிணற்றில் தண்ணீர் வற்றுவதே இல்லை. இறைக்க இறைக்கப் பொங்கும். முக்காலே மூண்டானி கிணற்றிலும் தண்ணீர் அடி பற்றி இருக்கும். சில கிணறுகள் வறண்டு போய் இருக்கும். அவர்களுக்கெல்லாம் எங்கள் வீட்டுக் கிணற்றைப் பார்த்துப் பொறாமை. உங்க வீட்டுக் கிணற்றுக்குத் தலைக்குளத்து ஊற்று என்பார்கள்.

**மினரல் வாட்டரை விட மேலான கிணற்றுத் தண்ணீர்**

- மழைக்காலங்களில் தலைக்குளத்துத் தண்ணீர், கலங்கலாக இருக்கும் போது எங்க வீட்டுக் கிணற்றுத் தண்ணீரும் கலங்கலாகத்தான் இருக்கும். ஆனால், ருசி குறைவாக இருக்காது. இன்று மினரல் வாட்டர் கேன் வாங்கித்தாங்கல.
- "ஊரில் பழைய ஒரு ஓட்டு வீடும், சுத்தத் தண்ணீர் கிடைக்கும் கிணறும் சும்மா கிடக்குடா, அங்குப் போய்த் தங்குவோம்" என்று பிள்ளைகளிடத்தில் சொன்னால் சீறுவார்கள். "ஆமாம். அங்க ஆரு இருக்கியா? எங்களுக்கு அங்கு ஆரெத்தெரியும். இந்த மினரல் வாட்டரை விட மேலா உங்க கிணற்றுத் தண்ணீர்?"

**அப்பாவின் பழைய நினைவுகள்**

- நான் பிறந்த மண்ணுடா, என் அப்பன் வச்ச வீடு சும்மா கிடக்குடா, அந்தத்தண்ணீ குடிச்சுதான் வளர்ந்தேன். தலைக்குளத்தின் கதைகள், கன்னியார் கோண ஏலாவைப்பற்றிய கதைகள், ஞானியார் நீரோடை, புன்னமூட்டடி, இதைப்பற்றியெல்லாம் தெரிய, அவர்களுக்கு ஆர்வம் இல்லை. டிவி கார்ட்டூன் அல்லது கம்ப்யூட்டர் கேம்ஸில் மூழ்கி கிடக்குகிறார்கள்.
- தலைக்குளத்தில் தலைப்பாகை கட்டிய ஒரு மனிதத்தலை வெள்ளி இரவுகளில் குளத்தங்கரை வழியாகச் செல்வோருக்குச் சலாம் சொல்லும் அற்புதக்கதை அவர்களுக்கு வேண்டாம்.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# பகுதி – V (4+2=6)

## மனப்பாடச் செய்யுள்

### தண்டியலங்கார உரை மேற்கோள் பாடல்

**இயல் - 1**

ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத்(து) இருளகற்றும் - ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன்(று) ஏனையது
தன்னேர் இலாத தமிழ்!

- **தண்டி**

**பாவகை -** நேரிசை வெண்பா

### கம்பராமாயணம்

**இயல் -3**

1. துன்பு உளதுஎனின் அன்றோ
சுகம் உளது? அது அன்றிப்
பின்பு உளது; இடை மன்னும்
பிரிவு உளது என உன்னேல்;
முன்பு உளெம் ஒரு நால்வேம்
முடிவு உளது என உன்னா
அன்பு உள, இனி, நாம் ஓர்
ஐவர்கள் உளர் ஆனோம்.

- **கம்பர்**

**பாவகை :** கலிவிருத்தம்

2. குகனோடும் ஐவர் ஆனோம்
முன்பு; பின் குன்று சூழ்வான்
மக னொடும் அறுவர் ஆனேம்;
எம்முழை அன்பின் வந்த
அகன் அமர் காதல் ஐய!
நின்னொடும் எழுவர் ஆனேம்;
புகல் அருங் கானம் தந்து,
புதல்வரால் பொலிந்தான் நுந்தை.

- **கம்பர்**

**பாவகை :** அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

### இதில் வெற்றி பெற

**இயல் - 4**

விண்வேறு; விண்வெளியில் இயங்கு கின்ற
வெண்மதியும் செங்கதிரும் முகிலும் வேறு;
மண்வேறு; மண்ணோடு கலந்தி ருக்கும்
மணல்வேறு; பனித்துளியும் மழையும் வேறு;
புண்வேறு; வீரர்களின் விழுப்புண் வேறு;
புகழ்வேறு; செல்வாக்கு வேறு; காணும்
கண்வேறு; கல்விக்கண் வேறு; கற்றார்
கவிநடையும் உரைநடையும் வேறு வேறு.

- **சுரதா**

**பாவகை:** எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

### இயல் -2 நெடுநல்வாடை

வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇப்
பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென
ஆர்கலி முனைஇய கொடுங்கோல் கோவலர்
ஏறுடை இனநிரை வேறுபுலம் பரப்பிப்
புலம்பெயர் புலம்பொடு கலங்கிக் கோடல்
நீர்இதழ்க் கண்ணி நீர் அலைக் கலாவ
மெய்க்கொள் பெரும்பனி நலிய பலருடன்
கைக்கொள் கொள்ளியர் கவுள்புடையூஉ நடுங்க

- **நக்கீரர்**

**பாவகை :** நேரிசை ஆசிரியப்பா

### திருக்குறள்

**இல்வாழ்க்கை**

1. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.
2. வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.

**செய்ந்நன்றியறிதல்**

3. செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது.
4. நன்றி மறப்பது நன்றன்று; நன்றல்லது
அன்றே மறப்பது நன்று.
5. எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

**வெஃகாமை**

6. அஃகாமை செல்வத்திற்கு யாதெனின் வெஃகாமை
வேண்டும் பிறன்கைப் பொருள்

**வெகுளாமை**

7. மறத்தல் வெகுளியை யார்மாட்டும்; தீய
பிறத்தல் அதனான் வரும்.
8. தன்னைத்தான் காக்கின் சினம்காக்க; காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்.
9. சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
ஏமப் புணையைச் சுடும்.

**ஊழ்**

10. நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றும்தன்
உண்மை அறிவே மிகும்.

### புறநானூறு

அறிவும் புகழும் உடையோர் மாய்ந்தென,
வறுந்தலை உலகமும் அன்றே; அதனால்
காவினெம் கலனே; சுருக்கினெம் கலப்பை
மரங்கொல் தச்சன் கைவல் சிறாஅர்
மழுவுடைக் காட்டகத்து அற்றே
எத்திசைச் செலினும், அத்திசைச் சோறே

- **ஔவையார்**

**பாவகை:** நேரிசை ஆசிரியப்பா



• ஞானம் • ஜெயம் • மகிழ்ச்சி

Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## அரசுப் பொதுத் தேர்வு - மார்ச் 2020

### பகுதி – I

**அ. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:** 14 x 1 =14

1. சிற்பி பாலசுப்பிரமணியத்தின் 'இளந்தமிழே' பாடல் இடம் பெற்ற நூல்.
   அ) மஸ்னவி ஆ) நிலவுப் பூ இ) காவ்யதர்சம் ஈ) துறைமுகம்
2. 'காவினெம் கலனே ; சுருக்கினம் கலப்பை"
   - இந்தத் தொடரில் 'கலன்' என்ற சொல்லின் பொருள்.
   அ) வேளாண்கருவி ஆ) போர்க் கருவி இ) தச்சுக் கருவி ஈ) இசைக்கருவி
3. மாதவி பெற்ற பட்டம் :
   அ) நாட்டியப் பேரொளி ஆ) நர்த்தகி இ) தலைக்கோலி ஈ) நாட்டிய மயூரி
4. புயலுக்குப் பெயர் வைக்கும் கூட்டமைப்பு நாடுகள் :
   அ) பத்து நாடுகள் ஆ) எட்டு நாடுகள் இ) ஐந்து நாடுகள் ஈ) பதினெட்டு நாடுகள்
5. த.ந. சற்குணரின் உரையைக் கேட்டுத் தூண்டப் பெற்ற மயிலை சீனி. வேங்கடசாமி எழுதிய நூல்.
   அ) கிறித்துவமும் தமிழும் ஆ) பௌத்தமும் தமிழும் இ) இசுலாமும் தமிழும் ஈ) சமணமும் தமிழும்
6. இராமலிங்க அடிகள் இயற்றிய நூல் :
   அ) திருவருட்பா ஆ) திருவாசகம் இ) திருக்குறள் ஈ) திருமந்திரம்
7. 'காய்நெல்' - இச்சொல்லுக்கான இலக்கணக் குறிப்பு
   அ) உம்மைத் தொகை ஆ) பண்புத் தொகை இ) வினைத் தொகை ஈ) உவமைத் தொகை
8. முதல்கல் - என்னும் சிறுகதையின் ஆசிரியர்
   அ) குலோத்துங்க சோழன் ஆ) உத்தம சோழன் இ) இராசராச சோழன் ஈ) இராஜேந்திர சோழன்
9. பிழையற்ற தொடரைக் கண்டறிக.
   அ) சென்னையிலிருந்து நேற்று வந்தான். ஆ) கோவலன் மதுரைக்குச் சென்றது.
   இ) பறவைகள் நெல்மணிகளை வேகமாகக் கொத்தித் தின்றது. ஈ) குதிரையும் யானையும் வேகமாக ஓடியது.
10. சுரதா நடத்திய கவிதை இதழ் :
    அ) விண்மீன் ஆ) இலக்கியம் இ) காவியம் ஈ) ஊர்வலம்
11. 'பொய்யா வானம்' - இலக்கணக் குறிப்புத் தருக.
    அ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் ஆ) வினைத்தொகை
    இ) உரிச்சொல் தொடர் ஈ) பெயரெச்சத் தொடர்
12. அருங்கானம் - புணர்ச்சி விதி தருக.
    அ) ஈறு போதல், தன் ஒற்று இரட்டல் ஆ) ஈறு போதல்
    இ) ஈறு போதல், இனமிகல் ஈ) ஈறு போதல், முன்னின்ற மெய்திரிதல்
13. மறைத்துச் சொல்லவும், மிகுத்துச் சொல்லவும், அழுத்திச் சொல்லவும் பயன்படும் உத்தி
    அ) தொன்மம் ஆ) குறியீடு இ) படிமம் ஈ) அங்கதம்
14. காப்பியம் எத்தனை வகைப்படும்?
    அ) மூன்று ஆ) இரண்டு இ) நான்கு ஈ) ஐந்து

### பகுதி – II, பிரிவு - 1 3 x 2 = 6

**எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக.**

**15. கவிஞர் சிற்பி எவற்றை வியந்துபாட, தமிழின் துணை வேண்டும் என்கிறார்?**

**16. விலங்குகளும் பறவைகளும் எவ்வாறு நடுங்கியதாக நக்கீரர் கூறுகிறார்?**

**17. வசனம், கவிதை - வேறுபாடு தருக.**

**18. வயலுக்குள் யானையைத் தனித்து விடுவதால் ஏற்படும் விளைவு யாது?**





Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## பெற்றோர் ஆசிரியர் கழக மாதிரி வினாத்தாள் - 1

### பகுதி – I

**அ. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:** 14 x 1 =14

1. பொருத்தி விடை தேர்க:

| | | |
|---|---|---|
| அ. உரிமைத்தாகம் | - | 1. பாரசீகக் கவிஞர் |
| ஆ. அஞ்ஞாடி | - | 2. பூமணி |
| இ. ஜலாலுதீன் ரூமி | - | 3. பக்தவச்சல பாரதி |
| ஈ. தமிழர் குடும்பமுறை | - | 4. சாகித்திய அகாதெமி |

அ. 2,4,3,1 ஆ.3,4,1,2 இ. 2,4,1,3 ஈ. 2,3,4,1

2. "மின்னேர் தனியாழி வெங்கதிரொன்று ஏனையது
தன்னேர் இலாத தமிழ்" - இவ்வடிகளில் பயின்று வந்துள்ள தொடைநயம்
அ. சீர்மோனை அடி எதுகை ஆ. சீர்மோனை சீர் எதுகை
இ. அடி எதுகை சீர் மோனை ஈ. சீர்எதுகை அடி மோனை

3. பெண்ணைத் தாழ்மை செய்தோன் கண்ணைக் குத்திக் கொண்டான் என்றெழுது – என்று கடிதம் எழுதியவர்.
அ. நெல்லையப்பர் ஆ. பாரதியார் இ. வாணிதாசன் ஈ. பாரதிதாசன்

4. எழுத்தாணிகள் எத்தனை வகைப்படும்?
அ. 2 ஆ. 3 இ. 4 ஈ. 5

5. சூழிமாற்று எந்தத் துறையோடு தொடர்புடைய சொல்?
அ. இலக்கியம் ஆ. கணிதம் இ. புவியியல் ஈ. வேளாண்மை

6. வேறுபட்டதைக் குறிப்பிடுக.
அ. அண்மைக் காட்சித் துணிப்பு ஆ. சேய்மைக் காட்சித் துணிப்பு
இ. நடுக்காட்சித் துணிப்பு ஈ. காட்சி மறைவு

7. ச.த. சற்குணரின் உரையைக் கேட்டுத் தூண்டப்பெற்ற 'மயிலை சீனி. வேங்கடசாமி' எழுதிய நூல்.
அ. பௌத்தமும் தமிழும் ஆ. இசுலாமும் தமிழும்
இ. சமணமும் தமிழும் ஈ. கிறிஸ்தவமும் தமிழும்

8. திட்டம் என்னும் தலைப்பில் வரங்கள் சாபங்கள் ஆகுமென்றால் இங்கு தவங்கள் எதற்காக? வரம் எதற்குக் குறியீடாகிறது.
அ. அமுத சுரபி ஆ. ஆதிரைப் பருக்கை இ. திட்டம் ஈ. பயனற்ற விளைவு

9. தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும் என்னும் விதிப்படி அமைந்த சொல்
அ. மண்ணில் ஆ. திரைப்படம் இ. இல்லை ஈ. பின்னிரவில்

10. தொல்காப்பியர் குறிப்பிடும் "மெய்ப்பாடு"
அ. ஆறு ஆ. ஏழு இ. எட்டு ஈ. ஒன்பது

11. ஐராவதம் மகாதேவன் கல்வெட்டு ஆய்வில் எடுக்கப்பட்ட ஆண்டுகள்.
அ. 20 ஆ. 30 இ. 40 ஈ. 50

12. தமிழில் கிடைக்கப் பெற்ற முதல் இலக்கண நூல்.
அ. தொல்காப்பியம் ஆ. புறப்பொருள் வெண்பாமாலை
இ. தொன்னூல் விளக்கம் ஈ. நன்னூல்

13. கண்டான் என்னும் சொல்லைப் பிரிக்கும் முறை
அ. காண் + ட் + ஆன் ஆ. காண் (கண்) + ட் + ஆன்
இ. காண் + ட் + ட் + ஆன் ஈ. காண்டு + ஆன்

14. உவமேயத்தைக் கேட்போர் ஊகித்துக் கொள்ளுமாறு உவமையை மட்டும் கூறுவது …..
அ. உவமை ஆ. உவமேயம்
இ. உத்தி ஈ. உள்ளுறை உவமம்





Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## பகுதி –IV

**இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக.** 3 x 6 = 18

44. அ. செய்ந்நன்றியறிதலே அறம் என்பதை வாயுறை வாழ்த்தின் துணைகொண்டு நிறுவுக.

(அல்லது)

ஆ. எளிய மக்களின் வலிகளை நாட்டுப்புற இலக்கிய வடிவங்களே முழுமையாகப் பிரதிபலிக்கின்றன நிறுவுக.

45. அ. பண்டைக்காலக் கல்வி முறையில் ஆசிரியர் மாணவர்களுக்கிடையே நிகழ்ந்த கற்றல், கற்பித்தல் முறைகளைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

ஆ. உலகப் புகழ்பெற்ற சென்னை அறிவின் நகரம், பண்பாட்டின், அடையாளம், நம்பிக்கை நகரம் என்பதை விளக்குக.

46. அ. பொறுப்புணர்ச்சியின்றி இருந்த ஊரைத் தன் பொறுப்புணர்வால் மாற்றிய மருதனின் பண்பு நலன்களை விவரிக்க.

(அல்லது)

ஆ. மகாநடிகரைக் கண்ட பாலசந்திரனின் மனவோட்டத்தை நயத்துடன் எழுதுக.

## பகுதி –V

47. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக.

அ. "பாதகர் குழுமி"..... எனத் தொடங்கும் இரட்சணிய யாத்திரிகப் பாடல் 1 x 4 = 4

ஆ. "மகற்கு"......... எனத் முடியும் குறட்பா. 1 x 2 = 2

## விடைக்குறிப்புகள்

### அரசுப் பொதுத்தேர்வு வினாத்தாள் - மார்ச் 2020

#### பகுதி - I

**அ. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:** 14 x 1 =14

1. ஆ) நிலவுப் பூ
2. ஈ) இசைக்கருவி
3. இ) தலைக்கோலி
4. ஆ) எட்டு நாடுகள்
5. அ) கிறித்தவமும் தமிழும்
6. அ) திருவருட்பா
7. இ) வினைத்தொகை
8. ஆ) உத்தம சோழன்
9. அ) சென்னையிலிருந்து நேற்று வந்தான்
10. இ) காவியம்
11. அ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
12. இ) ஈறுபோதல், இனமிகல்
13. ஆ) குறியீடு
14. ஆ) இரண்டு

#### பகுதி - II, பிரிவு - 1 3x 2 = 6

**எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக.**

**(இரண்டு கருத்துகள் இருப்பின் முழுமதிப்பெண் வழங்கலாம்)**

**15. கவிஞர் சிற்பி வியந்து பாடத் தமிழின் துணை வேண்டுவன.**

- ➢ கதிரவன் சிவக்க மறைதல்
- ➢ சிவந்த வானம் பூக்காடாய்க் காட்சியளித்தல்
- ➢ உழைப்பாளர்களின் துன்பம் அடைந்த சிவந்த கரங்கள்
- ➢ பருத்த தோள்களில் வியர்வைத் துளிகள் முத்துமுத்தாய் இருத்தல் - இவற்றை வியந்து பாட தமிழே! உன்னை விட்டால் வேறு துணையுண்டோ? என சிற்பி கூறுகிறார்.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**16. விலங்குகளும் பறவைகளும் நடுங்கிய விதமாக நக்கீரர் கூறுவன**

- ➢ விலங்குகள் மேய்ச்சலை மறந்தன
- ➢ குரங்குகள் நடுங்கின
- ➢ பறவைகள் நிலத்தில் வீழ்ந்தன
- ➢ பசுக்கள் கன்றுகளைத் தவிர்த்தன.

17. வசனம், கவிதை - வேறுபாடு

1. எதுகை, மோனைகளைச் சேர்க்காமல் அடியளவு பாராமல் அமைப்பது வசனம்.
2. யாப்பிலக்கண விதிகளுக்கு உட்பட்டு இயற்றப்படுவது கவிதை.

18. வயலுக்குள் யானையைத் தனித்து விடுவதால் ஏற்படும் விளைவு

யானையின் வாயில் புகுந்த நெல்லைவிட அதன் கால்களால் மிதிபட்டு அழியும் நெல்லின் அளவு அதிகமாகும்.

## பிரிவு – 2

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** 2x 2 = 4

**(இரண்டு கருத்துகள் இருப்பின் முழுமதிப்பெண் வழங்கலாம்)**

19. புக்கில் தற்காலிகத் தங்குமிடம்.

தன்மனை-திருமணத்திற்குப் பின் கணவன் மனைவி தனித்து வாழும் இடம்.

20. சென்னையை அலங்கரித்த ஆறுகள்

1. கொற்றலையாறு
2. கூவம்
3. அடையாறு
4. பாலாறு

(இரண்டு எழுதியிருப்பின் முழுமதிப்பெண் வழங்கலாம்)

21. பின்னணி இசை, காட்சியமைப்புக்கு உயிரூட்டும் விதம்

- ➢ திரைப்படத்தின் உணர்வுகளை வெளிக்கொணர உதவும்
- ➢ சான்று - கதைநாயகி சன்னல் வழியாக வெறித்துப் பார்த்தால் - தெரு காட்டப்படாமல் மகிழுந்து புறப்பட்டுச் செல்லும் ஒலி இணைக்கப்படுதல். அவளைப் பார்க்க வந்தவர், அவள் விருப்பத்திற்கு மாறாக அங்கிருந்து புறப்பட்டுச் செல்கிறார் என்ற கதை, அந்தப் பெண்ணின் முகபாவனை மூலமே சொல்லப்படுதல்

## பிரிவு – 3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** 7x 2 = 14

**22. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுதல்**

அ) இப்பொழுது எனக்குப் புரிந்துவிட்டது. நீயும் புரிந்துகொள்.

ஆ) வீட்டிற்கு அ) வீட்டின் அருகில் விளையாடிய குழந்தையை அப்பா எங்கு அழைத்துக் (இழுத்துக்) கொண்டு போனார்.

**23. கீழ்க்காணும் சொல்லுருபுகளைப் பிரித்தும் சேர்த்தும் இருவேறு தொடர்களை அமைக்க**

அ) அவன் **முன்வந்து** கூறினான்.
**அவன்முன்**வந்து கூறினான்.

ஆ) கண்ணன் **தானே**எழுதுவதாகச் சொன்னான்.
**கண்ணன்தானே** எழுதுவதாகச் சொன்னான்.

(பொருத்தமான தொடர் எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## பெற்றோர் ஆசிரியர் கழக மாதிரி வினாத்தாள் - 1

### பகுதி - I

அ. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்: 14 x 1 =14

1. இ) 2,4,1,3
2. இ) அடி எதுகை, சீர் மோனை
3. ஆ) பாரதியார்
4. ஆ) 3
5. ஆ) கணிதம்
6. ஈ) காட்சி மறைவு
7. ஈ) கிறிஸ்தவமும் தமிழும்
8. இ) திட்டம்
9. ஈ) பின்னிரவில்
10. இ) எட்டு
11. ஆ) 30
12. அ) தொல்காப்பியம்
13. ஆ) காண் (கண்) + ட் + ஆன்
14. ஈ) உள்ளுறை உவமம்

### பகுதி - II, பிரிவு - 1

**15. சிற்பி பாலசுப்பிரமணியம் - சிறுகுறிப்பு** 3 x 2 =6

- சிற்பி பாலசுப்பிரமணியம் கவிஞர், பேராசிரியர், மொழிபெயர்ப்பாளர், இதழாசிரியர்
- இவரின் "ஒரு கிராமத்தின் நதி" நூல் சாகித்ய அகாதமி பரிசு பெற்றது

**16. வாகைத்திணை**

- வெற்றி பெற்ற அரசனும் அவனது வீரர்களும் வெற்றியின் அடையாளமாக வாகைப்பூவைச் சூடி வெற்றியைக் கொண்டாடுவது வாகைத்திணை ஆகும்.

17. வக்கிரம், அவமானம், வஞ்சனை ஆகியவற்றை நாம் வரவேற்று விருந்தோம்ப வேண்டும் என்று "ஜலாலுதீன் ரூமி" கூறுகிறார்.

**18. உமணப் பெண்ணின் தோற்றம்**

- அழகும் இளமையும் வாய்ந்தவள், காலில் சிலம்பு அணிந்திருப்பாள்
- அழகிய வளையல்கள் ஒலிக்கத் தெருவில் கைகளை வீசி நடந்து சென்றாள்
- உமணப் பெண்ணின் கண்கள் இரண்டும் அச்சத்தால் மீன்கள் தம்முள் போர் செய்வதுபோல் மருண்டன.

### பிரிவு - 2

2 x 2 =4

**19. வித்தியாரம்பம்**

- குழந்தையை ஐந்து வயதில் தாய், தந்தையர் ஆசிரியர்களிடம் அடைக்கலப்படுத்துவர். இதுவே "வித்தியாரம்பம்" ஆகும். வித்தியாரம்பம் என்பது கல்வித் தொடக்க காலகட்டமாகும்.

20. **நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை**

21. **இசை, பின்னணி, திரைக்கதை, தயாரிப்பாளர், சினிமா கலைஞர்கள் ஆகிய அனைவரையும் காப்பாற்றும் தொழில் ஆகும்.**

### பிரிவு - 3

7 x 2 =14

**22. தலை, தழை, தளை**

இலைதழைகளைத் தளைத்து தலையில் சுமந்து சென்றான்.

**23. சரியான தொடர் - திருவளர் செல்வன்**

- வினைத்தொகையில் ஒற்று வராது

**24. பேசுவார் - பேசு + வ் + ஆர்**

- பேசு - பகுதி
- வ் - எதிர்கால இடைநிலை
- ஆர் - பலர்பால் வினை முற்று விகுதி

**25. பூம்பாவாய் - பூ + பாவாய்**

- பூப்பெயர் முன் இனமென்மையும் தோன்றும்

**26. தொடர்நிலை**

எழுவாய் + செயப்படுபொருள் + பயனிலை

**27. வெங்காயம்**

- வெங்காயம் - வெங்காயம் உணவுக்கு அதிகம் பயன்படுகிறது
- வெங் + காயம் - போரில் வீரர்கள் வெங்காயங்கள் பட்டு இறந்தனர்



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

# நமது வெளியீடுகள்

| | |
|---|---|
| XII | தமிழ் & ஆங்கிலம் |
| XI | தமிழ் & ஆங்கிலம் |
| X | தமிழ், ஆங்கிலம், கணிதம், அறிவியல் & சமூக அறிவியல் |
| IX | தமிழ் & ஆங்கிலம் |

Padasalai

## For Orders

99449 91847
98653 15131
99444 88077

KSJ TRB ACADEMY
Knowledgeful • Successful • Joyful
KSJ TRB ACADEMY
Namakkal

98422 30685
95665 51699

## KSJ Publications

272J, Ezhil Nagar, R.P. Pudur,
Namakkal - 637 001.
E-mail : ksjpublications@gmail.com
Web : www.ksjeduserves.com

SCAN ME

உரைநூல், அகமதிப்பீட்டுத் தேர்வு & ஒப்படைப்புக் குறிப்பேடு ₹190

Printed by Palani Murugan 9488757598

www.Padasalai.Net www.CBSEtips.in



# சுடரொளி தமிழ் உரை

• Knowledgeful • Successful • Joyful

• ஞானம் • ஜெயம் • மகிழ்ச்சி

# 12

# தமிழ்

புதிய பாடத்திட்ட அடிப்படையில் உருவாக்கம்

## அலகுமதிப்பீட்டுத் தேர்வு & ஒப்படைப்புக் குறிப்பேடு

பெயர் : ..........................................................................................

பதிவு எண் : ..........................................................................................

வகுப்பு : ........................................ பிரிவு : ..................................

பள்ளி : ..........................................................................................



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

# அகமதிப்பீட்டுத்தேர்வு - 10

பெயர் :........................ வகுப்பு :............ பிரிவு :............

பள்ளி :........................ தேதி :............

25

## பலவுள் தெரிக - பகுதி - 1 ( இயல் 1 முதல் 8 வரை ) 15 x 1 = 15

28. பொருத்துக:

அ) பேரியாழ் - 1. 16 நரம்புகள் ஆ) மகரயாழ் - 2. 7 நரம்புகள்
இ) சகோடயாழ் - 3. 21 நரம்புகள் ஈ) செங்கோட்டியாழ் - 4. 17 நரம்புகள்

அ) 4,3,2,1 ஆ) 3,4,2,1 இ) 3,4,1,2 ஈ) 4, 3,1,2 விடை: .......

2. உயர்ந்தோர் என்னும் சொல்லைப் பிரிக்கும் முறை

அ) உயர்ந்து + ஓர் ஆ) உயர் + த்(ந்) + த் + ஓர்
இ) உயர் + ந் + த் + ஓர் ஈ) உயர் + த் + ஓர் விடை: .......

3. சங்க இலக்கியத்தில் இல்லாத சொற்கள், சங்ககாலச் சமூகத்தில் நடைமுறையில் இருந்துள்ளன. அவை...

அ) அறவோர், துறவோர் ஆ) திருமணமும் குடும்பமும்
இ) மன்றங்களும் அவைகளும் ஈ) நிதியமும் சுங்கமும் விடை: .......

4. பொருத்துக

அ) வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் - 1) சேர்ந்தாரைக்கொல்லி
ஆ) பயன்தூக்கார் செய்த உதவி - 2) ஞாலத்தின் மாணப்பெரிது
இ) சினம் - 3) தெய்வத்துள் வைக்கப்படும்
ஈ) காலத்தினாற் செய்த நன்றி - 4) நன்மை கடலின் பெரிது

அ) 4 3 2 1 ஆ) 3 4 1 2 இ) 1 2 3 4 ஈ) 2 3 4 1 விடை: .......

5. பத்துப்பாட்டு ஆராய்ச்சி என்ற நூலின் ஆசிரியர்

அ) மு.இராகவையங்கார் ஆ) தேவநேயப்பாவாணர்
இ) உ.வே.சா ஈ) மா.இராசமாணிக்கனார் விடை: .......

6. படிமம் என்பதன் பொருள்

அ) சொல் ஆ) செயல் இ) காட்சி ஈ) ஒலி

7. பிரான்மலை - எந்த மாவட்டத்தில் உள்ளது?

அ) சிவகங்கை ஆ) திருநெல்வேலி இ) சென்னை ஈ) கோவை விடை: .......

8. நடுங்கும்படியான துன்பம் இல்லாதவர்

ஆ) மனத்திட்பம் உடையவர் ஈ) சூதாடுமிடத்தில் காலம் கழிப்பவர் இ) அரசரைச் சார்ந்தவர்கள்
அ) வரப்போவதை முன்னரே அறிந்து காத்துக் கொள்ளக்கூடியவர் விடை: .......

9. வேறுபட்டதைக் குறிப்பிடுக

அ) அண்மைக் காட்சித்துணிப்பு ஆ) சேய்மைக் காட்சித் துணிப்பு
இ) நடுக்காட்சித் துணிப்பு ஈ) காட்சி மறைவு விடை: .......

10. கல்விப்பயிற்சி என்பது

அ) வித்தியாரம்பம் ஆ) வித்தியாப்பியாசம்
இ) அக்ஷராப்பியாசம் ஈ) பெருக்கல் வாய்பாடு விடை: .......



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



11. மரபுப் பிழையற்ற தொடரைத் தேர்க.

அ) வாழைக்காட்டில் குயில்கள் அலறின, காகங்கள் கூவின
ஆ) வாழைத்தோப்பில் குயில்கள் குழறின, காகங்கள் அலறின
இ) வாழைத் தோட்டத்தில் குயில்கள் கூவின, காகங்கள் கரைந்தன
ஈ) வாழைத் தோப்பில் குயில்கள் கூவின, காகங்கள் கரைந்தன. விடை: .......

12. இந்தோ-சாரசனிக் கட்டிடக்கலை என்பது

அ) முகலாயக் கட்டிடக்கலை ஆ) பிரித்தானியக் கட்டிடக்கலை
இ) இந்தியப்பாரம்பரியக் கட்டிடக்கலை ஈ) இவை மூன்றும் கலந்தது விடை: .......

13. இரட்சணிய யாத்திரிகத்தில் உள்ள பருவங்களின் எண்ணிக்கை

அ) ஐந்து ஆ) ஆறு இ) மூன்று ஈ) ஏழு விடை: .......

14. "ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தாற் செயின்" - என்னும் குறள் குறிப்பது

அ) வேளாண் மேலாண்மை ஆ) நேர மேலாண்மை
இ) நிருவாக மேலாண்மை ஈ) வணிக மேலாண்மை விடை: .......

15. ச.த.சற்குணரின் உரையைக் கேட்டுத் தூண்டப்பெற்ற மயிலை சீனி.வேங்கடசாமி எழுதிய நூல்

அ) பௌத்தமும் தமிழும் ஆ) இசுலாமும் தமிழும்
இ) சமணமும் தமிழும் ஈ) கிறித்துவமும் தமிழும் விடை: .......

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. பகுதி - 2** 5 x 2 = 10

16) பொருள் வேறுபாடு அறிந்து தொடர் அமைக்க

தின்மை - திண்மை

விடை.:

17) பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.

அண்ணைக்கு அவனுக்குப் பணம் குடுத்து ஒதவியிருக்க வேண்டியதான்.

விடை:

18) சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க

தாமரை

விடை:

19) இலக்கணக்குறிப்புத் தருக.

பெருங்கடல்

விடை:

20) குறிப்புகளில் மறைந்திருக்கும் தமிழறிஞர்களைக் கண்டுபிடிக்க

அ) சிறுகதை ஆசிரியர், முதல் பாதி நவீனம் - விடை:

ஆ) முன்னெழுத்து அரசன், பின்னெழுத்து தமிழ் மாதம் - விடை:



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

# ஒப்படைப்பு

பெயர் :.................... வகுப்பு :.................... பிரிவு :....................

பள்ளி :.................... தேதி :....................

2

1. சொற்பொருள்பின்வரு நிலையணியைச் சான்றுடன் விளக்குக.

Padasalai

KSJ 12th சுடரொளி தமிழ் உரை வினா வங்கி



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

## நமது வெளியீடுகள்

| | |
|---|---|
| XII | தமிழ் & ஆங்கிலம் |
| XI | தமிழ் & ஆங்கிலம் |
| X | தமிழ், ஆங்கிலம், கணிதம், அறிவியல் & சமூக அறிவியல் |
| IX | தமிழ் & ஆங்கிலம் |

Padasalai

## For Orders

99449 91847
98653 15131
99444 88077

KSJ TRB ACADEMY
Namakkal

98422 30685
95665 51699

# KSJ Publications

272J, Ezhil Nagar, R.P. Pudur,
Namakkal - 637 001.
E-mail : ksjpublications@gmail.com
Web : www.ksjeduserves.com

SCAN ME